Reg.No. DS/VAD/N/SS/VOR/2012/57

VALVAI SEAMEN WELFARE ASSOCIATION

786, JAFFNA ROAD, VALVETTITHURAI, SRI LANKA

வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

786, யாழ் வீதி, வல்வெட்டித்துறை, இலங்கை

T.P.No.: 077 978 6096, 077 394 5431 Email : vaiswavalvai@gmail.com

நிர்வாகி
இணையதளம்
அன்புடையீர்,

**5வது பொதுக்கூட்டம் 10.01.2016**

**2014 - 2015க்கான ஆண்டறிக்கையும்**

**கப்பற்துறை முன்னோடி திரு வி.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும்**

மேற்படி நிகழ்வுகள் சம்பந்தமாக பின்வரும் ஆவணங்களையும் படங்களையும் இணைக்கின்றோம்.

1. 2014 - 2015க்கான ஆண்டறிக்கை
2. ஆண்டறிக்கையில் இடம் பெற்ற கடந்த ஆண்டு கௌரவிப்பு நிகழ்வுகள் சம்பந்தமான கலர்ப்பட இணைப்புகள் (3 பக்கம்)
3. நிகழ்வின் போது காட்சிப்படுத்தப்பட்ட படங்கள் (84)
4 Newly Elected VaiSWA committee members - 2016

தயவு செய்து பிரசுரிக்கவும்

ந.சிவரத்தினம்
சர்வதேச இணைப்பாளர்

18.01.2016

கடலோடிகளாகவும் கப்பலோட்டிகளாகவும்
வல்வை மண்ணின் பாரம்பரியத்தை காப்போம் வளர்ப்போம்.



TOWARADS RESTORING & FOSTERING THE GREAT
TRADITIONS OF THE SEAFARERS OF VALVETTITHURAI

Regd no - DS/VAD/ N/SS/VOR/2012/57

**VaiSWA**

E-mail:vaiswa2014@gmail.com
Website:www.valavaimalumiakal.com

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்.
valvai Seaman Welfare Association (Sri Lanka)
No - 786, Yarl Road, Valvettithurai
இல - 786, யாழ்வீதி, வல்வெட்டித்துறை

# 2014 - 2015 க்கான ஆண்டு அறிக்கையும் செயற்பாடுகளும்




**இளைஞர்களே, பெற்றோர்களே நலன் விரும்பிகளே எங்களுடன் இணைந்து செயற்பட வாருங்கள்.**

உங்கள் எதிர் காலத்தை ஒளி மயமாக்கவும் எமது தேசத்தைக் கட்டியெழுப்பவும் வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கான விழிப்புணர்வை உண்டாக்கவும் "VaiSWA" எனும் வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம், அனைத்து தமிழ் இளைஞர்களினதும் நலன் கருதி செயற்படுகின்றது.

# About us

## VALVAI SEAMEN WELFARE ASSOCITATION (VaiSWA)

Valvettiturai is a coastal town in the Northern tip of SRI LKANKA lying along the coast of Palk Strait. People here are with a trade skill in Navigation, Acquired by Hereditary having a history over 200 years.
Our ancestors were engaged in ship building using local raw material and timber. Those ships were internationally registered and navigated in deep ocean extending very far under the flag ` union jack`. Few of these vessels were sunk by Japanese Navy during the 2nd world war. Few lives were lost and few had been rescued by them.

Once, the famous American Navigator Mr. .Robinson who visited our place and admired our ships .A particular ship called "ANNAPOORANY" drew his attention very much and he decided to buy that and wanted to take Same to his mother land (U.S.A) in 1930.He bought that ship and made some modification like installing onboard few more cabins and an engine for transit passage in SUEZ canal. She set sailed from here under the command of Capt. Thambipillai and manned by a crew of our people. She arrived in BOSTON in America after few months of voyage with severe hardship crossing the Atlantic ocean, the foregoing resume is one of the adventures of Vavettiturai seafarers. Valvai (valvettiturai) Seamen Welfare Association was formed in 1970 as a charity organization by senior seafarers and well wishers of the people of Valvetiturai. The main aim was caring and sharing with seafarers` affairs like urging suitable persons to engage in this trade by conducting classes in Nautical studies and training them onboard vessels which had been anchored in Trincomalee Harbor in Sri Lanka at that time. After these training procedures, the association arranged Employments too with some leading shipping companies, as cadets or in lower Ranks.
Also the association used to help its member seafarers financially for their Studies in Bombay(India) under a loan scheme. The association organized a pension scheme and an insurance scheme with a leading finance company. Thus it committed itself to the benefit of every member seaman.

After few years of hardship the association succeeded in its target such as creating few master mariners, chief engineers and highly skilled persons in various ranks. Once, the association was one of the major suppliers of crew to shipping companies on free of charge. The activities of Valvai Seamen Welfare Association had been disturbed since the year 1987 after the Eruption of an internal strife in Sri Lanka. This conflict led to an armed struggle lasted for many years. Gradually, activities of the Association came to a halt due to the disturbances and most of the members scattered away. However the prolonged war ended in 2009.The exisistance of the war not only led us to the poverty level, but also to loss of lives and property which had driven the people to a desperate and complete frustration. The VaiSWA was reorganized by some well-wishers in the survived seafarers' society and commenced its activities to help the most affected victims.

VaiSWA selected few students who were eligible to become seafarer. We taught them basic Navigation and marine engine knowledge, enrolled them for their pre-sea training course in C.I.N.E.C (Colombo International Nautical and Engineering College) and arranged to obtain the sea men book (C.D.C) In the mean time we arranged some regular seminars and classes with the assistance of our

senior master mariners, chief engineers whenever they visit here on leave to share their knowledge and experiences regarding modern equipments onboard and new techniques.

Now the North experiences a grave unemployment problem but opportunities are not tapped in various fields by the educated youths, technically skilled people and the prospective job seekers. By tradition they are confined to certain limited fields only.

They fail to recognize that in every career there are opportunities knocking their doors. As a small contribution to the North especially to Jaffna District, at present (which could be extended to other areas too in due course) we have started our activities to open up opportunities in vessels voyaging around the world. The sea connected trade is becoming more and more important and the needs for skilled people to man large vessels are in the increase. We also break the belief that sea is dangerous which mentality exists among the village folks in general and the middle class in particular. We have found that the future of the youths who have been trained in the Marine field and qualify themselves will be prosperous with fabulous remuneration beyond expectation but with minimum risk while opening up the world before them, with the visits to practically many Sea ports and the relevant countries.

Our present activities are

Identifying youths for marine industry. Facilitating them to get education in this field, according to their Educational qualification. Maintaining good relationship with CINEC in order to provide and direct the students to follow their interested courses. Finding employments for the passed out / qualified students, for this purpose approaching various group of people such as senior officers in the ship, Influential seafarers working in the ship abroad and crew agents. Opening a website for us and sharing about our activities with valvai well wishers and obtaining information and articles to be published through the website Obtaining support and advices from the retired sea men of valvettithurai who presently live abroad.

The summary of the above will be published in Tamil language, shortly.

## ஆவணப்படுத்துகிறோம்

வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் கப்பற் தொழில் சம்பந்தமான முக்கியமான தகவல்கள், சரித்திரங்கள், படங்கள், ஆவணங்கள் கப்பற்தொழிலில் உபயொகப்படுத்தப்பட்ட பழய பொருட்கள் மாலுமி சாஸ்திர நூல்கள் என்னவற்றை பெற்று அவற்றை பாதுகாப்பதிலும் ஆவணப்படுத்துவதிலும் நாம் மிக ஆர்வமாக உள்ளோம்.

இவற்றை தம்வசம் வைத்திருப்பவர்கள் அல்லது இருப்பவர்களிடமிருந்து பெற்றுத்தரக் கூடியவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு உதவ முன்வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

VaiSWA

## அறிமுகம்

**சங்கத்தின் ஆரம்பம்**

1970களில் இழுவைக்கப்பல் கப்ரனாக இருந்த திரு.அ.அம்பலவாணர், சுங்க இலாகா அத்தியட்சகராக கடமையாற்றிய திரு.பொ.வல்லிபுரம் போன்ற இன்னும் பல நலன் விரும்பிகளால் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு, கப்டன் கா.மோகனதாஸ் மற்றும் கப்ரன் S.சிவநேசன் போன்றவர்களால் யாழ்ப்பாணத்தில் (காங்கேசன்துறை) தொடரப்பட்டு நவீன கப்பல் தொழில் யுகத்தில் பல மாலுமிகளை வல்வையில் இருந்து பல்வேறுபட்ட தரங்களுக்கு அனுப்பி வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்து வந்தது.

எனினும் கடந்த 30 ஆண்டுகளில் நிகழ்ந்த போர்ச்சூழல் காரணமாக இச்சங்கம் இயங்கா நிலையை அடைந்திருந்தது.

இருந்தும் Chief Engineer ஆக கடமை புரிந்தவரும் Capt. C.மோகனதாஸ் அவர்களின் தம்பியுமான திரு.C.ரஞ்சனதாஸ் அவர்களின் ஊர்பற்றினாலும், வெளிநாட்டுக் கப்பல்களில் கப்பல் தொழில் புரிந்து ஓய்வு பெற்றவர்களும், கப்ரன் E.துரைலிங்கம், கப்டன் சிவாஜி போன்றவர்களதும் எண்ணக்கருவில் எமது சங்கத்தை மீளமைப்பு செய்ய வேண்டும் எனும் அபிப்பிராயம் தோன்றியிருக்க வேண்டும். இதில் முக்கியமானவர் **கப்டன் N.கலைநேசன்** அவர்கள். இவர் எம் மண்ணுக்கு நேரடியாக விஜயம் செய்து வல்வை நலன் விரும்பிகளைச் சந்தித்து புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய இச்சங்கத்தின் முக்கியத்தும் பற்றி விளக்கி கூறியிருந்தார்.

இதன் விளைவாக காலம் சென்ற எமது சங்கத்தலைவர் திரு.C.ரஞ்சனதாஸ், திரு.பூ.அகமணிதேவர், திரு இ.இராஜேந்திரா மற்றும் திரு.கி.பஞ்சலிங்கம் போன்றோர் முன்வந்து வல்வை நகரின் நலன் விரும்பிகள் சிலரும் சேர்ந்து வெளிநாடுகளில் தொழில் புரிவோரது ஆலோசனைகளையும் பெற்று 23.10.2011ல் வல்வை அ.மி.த.க பாடசாலையில் திரு.சிவகுகதாசன் மாஸ்ரர் அவர்களின் தற்காலிக தலைமையில் ஒரு பொதுக்கூட்டத்தை நடாத்தினர். இதில் கப்ரன் N.கலைநேசன் சிறப்புரை ஆற்றி இச்சங்கம் மீளமைப்பு செய்யப்பட வேண்டிய தேவையையும் சர்வதேச ரீதியாக இத்துறையில் உள்ள ஏனைய எம்மவரை ஒருங்கிணைத்து ஆதரவு நல்குவதாகவும் உறுதிபடக்கூறி உற்சாகமூட்டியிருந்தார்.

இதற்கமைய **"வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்"** எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு, 11பேர் கொண்ட செயலணி தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தமக்குள் நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

எனவே 24.10.2011ல் (மறுநாளில்) 2012ம் ஆண்டுக்கான நிர்வாக சபைக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

**4வது ஆண்டு (2015க்குரியது)**

மேற்படி கூட்டம் 18.12.2014 மாலை 6.45 மணியளவில் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தின் உபதலைவர் திரு. பொ.சிவானந்தம் தலைமையில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் சர்வதேச இணைப்பாளர் திரு.ந.சிவரட்ணம் 06.12.2014ல் நடைபெற்ற சங்கத்தின் நிர்வாக சபை கூட்ட அறிக்கையை வாசித்து முடிக்க அதனை சரியென திரு. V.கிருஷ்ணமூர்த்தி முன்மொழிந்தும் திரு.இ.இராஜேந்திரா வழிமொழிந்தும் சபை அதனை ஏற்றுக்கொண்டது. அதன்பின்பு மீண்டும் சர்வதேச இணைப்பாளர் 14.12.2014ல் நடைபெற்ற பொதுக்கூட்ட அறிக்கையையும் வாசித்து அதனையும் சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அதன்பின்பு பொதுக்கூட்டத்தில் தெரிவான 22பேர்களில் கீழ் உள்ள நிர்வகாசபைக்கான 21 அங்கத்தவர்களையும் சபை ஏகமனதாக ஏற்றுக் கொள்ள உரிய பதவிகளையும் அவரவர்கள் ஏற்றுக் கொண்டனர் இதன் விபரம் வருமாறு.

| பெயர் | பதவி | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| 1. Capt. S.பாஸ்கரன் | இணைத்தலைவர் | 077 3263504 |
| 2. Capt. N.வினாயகமூர்த்தி | இணைத்தலைவர் | 077 2454030/021 226 4037 |
| 3. R.இராஜேந்திரா | இணைத்தலைவர் | 077 3068750 |
| 4. P.சிவானந்தம் | உபதலைவர் | 021 3215968/077 5274386 |
| 5. K.சுரேந்திரதாஸ் | செயலாளர் | 0778303676 |
| 6. R.சண்முகதாஸ் | உபசெயலாளர் | 077 3699179 |
| 7. T.சுந்தரமூர்த்தி | பொருளாளர் | 021 7900808/077 7531466 |
| 8. V.கிருஷ்ணமூர்த்தி | உபபொருளாளர் | 077 8549890 |
| 9. N. சிவரத்தினம் | சர்வதேச இணைப்பாளர் | 0766463289/021 226 3750 |
| 10. P.அகமணிதேவர் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 1028837 |
| 11. K.யோகேஸ்வரராஜா | நிர்வாக சபை உறுப்பினர் | 07 2321906 |
| 12. P. பாலேந்திரா | நிர்வாக சபை உறுப்பினர் | 077 8223632 |
| 13. K.பஞ்சலிங்கம் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 6695911 |
| 14. P.குகநாதன் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 0040731 |
| 15. S.சந்திரராஜா | நிர்வாக சபை உறுப்பினர் | 077 4731242 |
| 16. P.சிவஞானசுந்தரம் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 9382357 |
| 17. S.இராஜவேல்(அமலன்) | நிர்வாக சபை உறுப்பினர் | 077 4849529 |
| 18. T.சந்திரசேகரம் (துரைமாமா) | நிர்வாக சபை உறுப்பினர் | 077 8037292 |
| 19. S.நிர்மலகுமார் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 0669477 |
| 20 V.தினேஸ்கரன் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 8570362 |
| 21. U.செல்வசுந்தரம் | நிர்வாக சபை உறுப்பினர் | 077 1777585 |

**4வது பொதுக்கூட்ட அறிக்கை**

14.12.2014ல் வல்வை நவீனசந்தைக் கட்டட மேல்மாடியில் நடைபெற்றது.

06.12.2014ல் நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்ட முடிவின்படி 14.12.2014ல் வல்வை நகரசபையின் நவீன சந்தைக் கட்டட மேல்மாடியில் அழைப்பிதழில் குறிப்பிட்டவாறு மாலை 3.00 மணிக்கு நலன்விரும்பிகள் வருகை தரத் தொடங்கி பி.ப 4.00மணிக்கு கூட்டம் ஆரம்பமானது.

60 நலன் விரும்பிகளுக்கு மேல் இங்கு சமூமளித்திருந்தனர்.

❖ நிகழ்ச்சி நிரலின்படி திரு.கி.பஞ்சலிங்கம் அவர்களின் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மரணித்த எமது சங்கத் தலைவர் திரு.கா.றஞ்சனதாஸ் அவர்கள் உட்பட போரில் மாண்ட அனைத்து மக்களுக்குமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

❖ தொடர்ந்து தலைவர் திரு.பொ.சிவானந்தம் தனது தலைமை உரையையும் வரவேற்புரையையும் நிகழ்த்தினார். தனதுரையில் அக்காலத்தைப் போலல்லாது கப்பற்றொழில் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதுடன் சர்வதேச கடல் சட்டங்களை கட்டாயம் கைக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் சகலரும் உரிய கற்கை நெறிகளில் தக்க சான்றிதழ்களை பெற வேண்டுமென்றும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கில அறிவை பெற்றிருக்க வேண்டிய அவசியத்தையும் வலியுத்தினார்.

Capt. கா.மோகனதாஸ் அவர்கள் 1980களில் கப்பலொன்றை Charter பண்ணி அதில்வெற்றியடைந்த மையையும் குறிப்பிட்டு தற்கால கப்ரன்களுக்கும் ஏனையோருக்கும் இது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஊட்டியதுடன் சமூகம்தந்த அனைவரையும் வரவேற்று தொடர்ந்து கூட்டத்தை நடாத்தும் பொறுப்பை திரு.கி.பஞ்சலிங்கத்திடம் விடுத்து, அமர்ந்து கொண்டார்.

❖ நிர்வாக சபை உறுப்பினரான திரு. கி.பஞ்சலிங்கம் தற்கால இளைஞர்களும், பெற்றோரும் கப்பல் சம்பந்தமான படிப்பை பற்றி கொண்டிருக்கும் மனநிலையைக் கண்டித்துப்பேசினார். அதாவது கப்பலில் சேர்ந்து படித்து Cadet officer ஆகி பின்னர் Captains களாகவோ அன்றி Chief Engineers களாகவோ வருவதை பட்டப்படிப்பு என ஏற்றுக்கொள்ள பலர் மறுக்கின்றார்கள். அது அவர்களுடைய அறியாமையே.

கப்பல் படிப்பு கடலில் வேலை செய்வதற்கு மட்டுமல்ல துறைமுகங்கள் தொழிற்சாலைகள் கல்லூரிகள் போன்றவற்றில் வேலை செய்வதற்கும் தேவைப்படுகிறது. எனவே தரையில் (Landல்) Engineer ஆகவோ Doctor ஆகவோ பட்டம்பெற்று வேலை செய்வதைப் போல Navigation கற்கை நெறிகள் மூலம் கிடைக்கும் பட்டப்படிப்புகளும் மிகவும் பெறுமதி வாய்ந்தவை என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதுடன் தலைவரின் இழப்புக்கு பின் எமது முன்னேற்றத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளையும், பொதுவாக சங்கம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எடுத்துரைத்து புதிய நிர்வாக சபைக்கு ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் பங்களிப்பு செய்யக் கூடியவர்களை தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டரர்.

❖ இதனைத் தொடர்ந்து செயலாளர் திரு.இ.சண்முகதாஸ் அவர்களால் கடந்தவருட பொதுக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. இவ்வறிக்கை சரியானதென Capt. N.வினாயகமூர்த்தி அவர்கள் பிரேரிக்க திரு.க.சுரேந்திரதாஸ் அவர்கள் ஆமோதிக்க சபை அதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

❖ அடுத்த நிகழ்வாக திரு.து.சத்திவேல் (பொருளாளர்) அவர்களால் ஆண்டுக்கான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ் விபரம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டு சபையோருக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதனை வாசித்து தேவையான விளக்கங்களை கேட்கலாம் எனக் கூறினார்.

கணக்கில் பிழைகள் ஏதும் இல்லை என திரு.S.கிரிதரன்அவர்கள் பிரேரிக்க திரு.T.சந்திரசேகர் அவர்கள் ஆமோதிக்க சபை கணக்கறிக்கையை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

❖ இதனை தொடர்ந்து சங்கத்தின் சர்வதேச இணைப்பாளர் ந.சிவரட்ணம் அவர்கள் உரையாற்றினார். அவர் தனது உரையில் தலைவர் கா.றஞ்சனதாஸ் அவர்களின் மறைவினால் எமது சங்கத்தின் பின்னடைவுகளையும் இதனை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல வேண்டுமெனில் அர்ப்பணிப்புடன் கூடிய தகுதிவாய்ந்த ஆர்வலர்களை இம்முறை நிர்வாகக் குழுவுக்கு தெரிவு செய்ய வேண்டும் என்பதையும் கூறினார். அத்துடன் திரு.கி.பஞ்சலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதை தானும் ஏற்றுக் கொள்வதாகவும் அதே போல தலைவர் கூறியதையும் ஏற்று கப்பற்றுறை கற்கை நெறிகளை சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் கூடிய பட்டப்படிப்புவரை கற்க இளைஞர்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன் இப்போ புதிதாக CDC எடுத்துள்ளவர்களுக்கு தற்போது கப்பலில் வேலை செய்பவர்கள் வேலை பெற்றுத்தர முயற்சிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

❖ இதனைத் தொடர்ந்து விஷேட கருத்தரங்கம் ஆரம்பமானது "கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி" குருநகர், யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த கீழ்க்காணும் வளவாளர்கள் இதில் சிறப்புரை யாற்றினர்.

| | |
|---|---|
| திரு.K.ஆனந்தகுமாரன் | - உதவிப்பணிப்பாளர் |
| திரு.A.சூரியகுமார் | - அபிவிருத்தி அதிகாரி |
| திரு. ஜேசுதாஸ் | - அபிவிருத்தி அதிகாரி |

இவர்கள் இக்கலூரியை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு தாம் பட்ட கஷ்டங்களையும் அங்கு பின்வரும் கற்கை நெறிகள் கற்பிக்கப்படுவதாகவும் ஆனால் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை எனவும் குறிப்பிட்டதுடன் இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து N.V.Q சான்றிதழ்களைப் பெறுபவர்கள் சர்வதேச ரீதியில் வேலை வாய்ப்புக்களைப் பெற சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

❖ மீன்பிடித் தொழில்நுட்பம் (NVQ-3)
❖ கடல் வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் (GPS)
❖ வெளி இணைப்பு இயந்திர பொறியியலாளர், கடல் ஓட்டுனர் பயிற்சி நெறி, உயிர்ப்பாதுகாப்பு பயிற்சி நெறி, சுழியோடிப் பயிற்சிநெறி (NVQ-4)
❖ கடலக மாலுமிப் பயிற்சிநெறி, கரையோர வளங்களின் முகாமைத்துவம் (NVQ-4)
❖ மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடி முகாமைத்துவம் (NVQ-4)
❖ படகு உற்பத்திசெய்தலும் திருத்தலும் (NVQ-4)

இங்கு பொதுவாக இவைபற்றிய விளக்கங்கள் தரப்பட்ட போதும் வளவாளர் திரு.ஜேசுதாஸ் NVQ சான்றிதழ்களைப்பற்றி சிறப்பான விளக்கமளித்தார். இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படும் இச்சான்றிதழ்கள் மிகப் பெறுமதி வாய்ந்தன மட்டுமல்லாது சர்வதேச ரீதியில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் பேருதவியாகுமென குறிப்பிட்டார்.

கல்வித்தகமை இல்லாதவர்கள் கூட NVQ - 4 வரை கற்று Certificate Level ஐ பெற்றுத் திறமைசாலிகளாகி NVQ - 5ல் தேறி Diploma மற்றும் அதற்கு மேல் கற்று (Degree) பட்டதாரிகளாக் கூட (சர்வகலாசாலை செல்லாது) வரலாம் என தெளிவுபடுத்தினார்.

இதில் சகலரும் ஆர்வம் காட்டியது G.P.S என்னும் கற்கை நெறியாகும். இதன் முக்கியத்துவத்தை Capt. S. சிவநேசன் அவர்கள் இற்றைக்கு 3, 4 தசாப்த்தங்களுக்கு முன்பு, தான் மீன்பிடி ரோலரில் அதிகாரியாக தொழில் புரிந்த போது கடலில் நிலையங்களை (Positions) கண்டறிவதற்கு பட்ட கஷ்டங்களை விளக்கி கூறி ஒவ்வொரு மாலுமியும் இதனைப்பற்றி அறிய வேண்டுமெனவும் வலியுறுத்தி கூறினார்.

❖தொடர்ந்து Capt. S.பாஸ்கரன் உரையாற்றினார். இவர் தனது உரையில் N.V.Q. சான்றிதள்களின் நன்மைகளையும் பெறுமதியையும் பற்றியும் தனது அனுபவங்களை பற்றியும் சபையினருக்குக் கூறி கற்கை நெறிகளை இளஞர்கள் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

❖இதனைத் தொடர்ந்து V2 Travels & Tours Director திரு. S. சாருபன் இக்கற்கை நெறிகளின் நன்மைபற்றியும் அதற்கான வேலைவாய்ப்புக்களைப் பற்றியும் விளக்கமளித்தார். பின்வருமாறு இவரது உரை அமைந்தது.

முதலில் தன்னை அறிமுகப்படுத்திய இவர். தான் ஸ்கண்டிநேவியன் நாடுகளில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பைப்பெறும் நோக்கில் ஒரு ஆய்வை செய்வதற்காக சென்றதாகவும் இன்று குருநகர் கடல்வள கல்லூரியிலிருந்து வந்த வளவாளர்கள் விளங்கப்படுத்திய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நிறைய வேலைவாய்ப்புக்கள் உள்ளதாகவும் அதற்கும் ஓரளவு ஆங்கில அறிவு தேவை எனவும் கூறினார். இது விடயத்தில் தன்னால் உதவ முடியும் என்றும் உறுதி கூறினார்.

கருத்தரங்கில் வளவாளர்கள் கூறிய கற்கை நெறிகளில் சில, ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ரூ.100 கட்டணத்துடன் மாணவர்கள் கற்றார்கள் என்றும் இப்போது அதனுடைய பெறுமதி ரூ 5000 ஆகியுள்ளதென்றும் கூறி அவர்களுடன் பேரம் பேசி G.P.S. கற்கை நெறிக்கு ரூ 5000 ஆன தொகையை குறைத்து ஆர்வலர்களை அனுப்ப VaiSWA முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (இதன் பயனாக உதவிப்பணிப்பாளர் குறைந்த கட்டணத்துடன் கற்பிக்க முன்வந்தார்) மேலும் பல வேலைவாய்ப்புக்களைப் பற்றி கூறிய இவர் எதுவாயினும் ஏதோ ஒரு கற்கை நெறியை மேற்கொண்டு ஆங்கில அறிவையும் ஓரளவு பெற்றுக்கொண்டால் வேலை வாய்ப்பு நிச்சயம் எனக் கூறினார். அத்துடன் VaiSWAவின் ஒரு பகுதியை வியாபாரமயப்படுத்தி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க தயாராவது நன்மை பயக்கும் என்று கூறியதுடன் தேவைப்பட்டால் யாழ்ப்பாணத்தில் VaiSWA வுக்கு என ஒரு காரியாலயம் அமைக்க இடம் இலவசமாக தருவதற்கும் முன்வந்தார்.

❖ யாழ் நகரில் இருந்து வந்திருந்த Engineer திரு.தில்லைநாதன் அடுத்து சில வார்த்தைகள் கூறினார்.

தான் பத்திரிகை வாயிலாக இக்கூட்டம் பற்றி அறிந்து வந்ததாகவும் இங்கு வந்தவுடன் தன் நண்பர் சிவரத்தினத்தைக் கண்டு உற்சாகம் பெற்றதாகவும் கூறி, வேலை இல்லை என்று எவரும் கூற முடியாது. எல்லோருக்கும் வேலை உண்டு. ஆனால் அதற்கான முயற்சியில் இளம் தலைமுறையினர் ஈடுபடுவதில்லை. வேலையின்மையால் சமுதாயம் சீரழிந்து வருவதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட கற்கை நெறிகளை கற்க சகலருக்கும் வாய்ப்புக்கள் உண்டு என்றும். எனவே VaiSWA வின் ஆலோசனையுடன் எல்லோரும் தமக்கு விருப்பமான கற்கை நெறிகளை தமது கல்வித்தராதரத்துக்கு ஏற்ப பயின்று தொழிலில் ஈடுபட்டு தமக்கும் சமுதாயத்திற்கும் நன்மை தேடிக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதுடன், தான் யாழ் நகரில் இருந்து இங்கு வந்தமைக்கு காரணம் சமூகத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத்தர முயற்சிக்கும் VaiSWA வினால் ஒழுங்கு செய்து தரப்பட்ட இக்கருத்தரங்கில் இருந்து சில அறிவுகளை பெற்று பொதுவாக இளைய சமுதாயத்திற்கு உதவி செய்வதற்காகவே எனக் கூறிச்சென்று எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து கப்ரன் S.சிவநேசன் அவர்கள் VaiSWA வின் கருத்தரங்குகள், கூட்டங்கள், ஒன்று கூடல்கள் போன்றவற்றில் தான் அடிக்கடி பங்கு கொள்வதாகவும் அவர்களின் செயற்பாட்டிற்கு எல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டதுடன் தனது றோலர் மீன்பிடி அனுபவங்களையும் ஏனைய மாலுமிகளுக்கான பயனுள்ள விடயங்களையும் பகிர்ந்து கொண்டார். அத்துடன் (Agent) Capt S.A.F சிலுவைதாஸ் என்பவர் வல்வை மாலுமிகளுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு காலத்தில் வேலை வாய்ப்புக்களையும் வேறு நன்மைகளையும் புரிந்தவரென்றும் எனவே மணி அண்ணாவுக்கு அனுப்பியது போல வாழ்த்துச்செய்தி ஒன்றை இவருக்கும் அனுப்பவேண்டுமென ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இதனை சபையினர் ஏற்றுக்கொண்டதுடன் புதிய நிர்வாகம் ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**இதனைத்தொடர்ந்து Capt. இ. இராஜேந்திரா உரையாற்றுகையில்**

VaiSWA வின் தற்போதைய நிலைப்பாட்டையும் தலைவரின் மறைவினால் ஏற்பட்ட தாக்கத்தையும் பற்றி கூறியதுடன் கற்கை நெறிகள் பற்றிய விவரங்களையும் கூறினார். VaiSWA வல்வெட்டித்துறை என்ற எல்லைக்கப்பால் சென்று தனது சேவையை ஆற்றுவதாகவும் Cadet கற்கை நெறியை மேற்கொள்ள VaiSWAவின் உதவியை நாடி பருத்தித்துறையில் இருந்து வந்தவர்களும் இக்கூட்டத்தில் பங்கு கொள்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

புதிய மாலுமிகளுக்கும் ஏற்கனவே service உள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பபை பெற்றுத்தருவதில் தாம் தொடர்ந்து முயற்சிப்பதாகவும் கூறி சில முயற்சிகளின் விபரங்களையும் அதன் விளைவுகளையும் கூறி நல்லதொரு செயலணியை தெரிவு செய்யுமாறு சபையினருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதைத் தொடர்ந்து பழைய நிர்வாக சபை கலைக்கப்பட்டதாக அறியப்படுத்தப்பட்டு புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கு ஆயத்தமான பொழுது தற்காலிக தலைவராக ஒருவரை தெரிவு செய்ய சபையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திரு. சிவநேசன் அவர்கள் பழைய நிர்வாக சபையின் தலைவராகிய திரு. பொ.சிவானந்தம் அவர்களையே தற்காலிக தலைவராக இருந்து புதிய தெரிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்க சபையினரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

இதற்கமைய திரு.பொ.சிவானந்தம் அவர்கள் தற்காலிகமாக செயற்பட்டு நிர்வாக சபை அங்கத்தவர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக்கூறி குறைந்தது 17 அங்கத்தவர்களையாவது தெரிவு செய்ய வேண்டும் என்றும் இவர்கள் பிறிதொருநாள் ஒன்று கூடி வழமைபோல தமக்குள் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகளுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வார்கள் எனவும் கூறி உரிய பிரேரணைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஒரே நேரத்தில் பலர், பலரது பெயர்களை பிரேரித்தமையால் தனிப்பட்ட முறையில் பிரேரித்தவர் மற்றும் ஆமோதித்தவர் பெயர்களை குறிப்பெடுப்பது சிரமமாக இருந்தமையால் சபையிலுள்ளோர் பொதுவாக தகுதியானவர்களை பிரேரிப்பது எனவும் அதை சபை ஏகமனதாக ஏற்றுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய 22 உறுப்பினர்கள் சபையில் இருந்தோர்களால் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

**இவர்கள் பற்றிய விபரங்களை 5வது பக்கத்தில் காணலாம்**

மேற்படி அறிக்கை 18.12.2014ல் நடைபெற்ற புதிய நிர்வாக சபைக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டு இதில் காணப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இதில் முக்கிய விடயமாக மாலுமிகளுக்கான கற்கை நெறியை மேற்கொள்வதற்காகவும் வேலை வாய்ப்பைபெற முகவர்களுக்கு பணம் கொடுப்பதற்கும் தேவையான நிதி உதவியை, கடன் அடிப்படையில் வழங்குவது பற்றி 14.12.2014 பொதுக்கூட்டத்தில் எழுப்பப்பட்டமை கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டது.

தற்பொழுது VaiSWAவின் கனடா கிளையில் இருந்து கிடைத்த ஏறக்குறை ரூபா 300,000 நிதியினைக் கொண்டுதான் சுழற்சி முறையில் கூடிய தொகையான ரூபா 50,000 படி இச்சங்கம் வழங்கி வருகின்றது. நாம் மேலும் கடன் வழங்க நலன் விரும்பிகளிடமிருந்து விஷேட செயற்பாடுகள் மூலம் நிதியைச் சேகரித்தால் மாலுமிகள் பலரை உருவாக்க முடியும் என சகலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

எனவே இணைய தளங்கள் மூலமாக இவ் விஷேட நிதிதிரட்டலுக்கான அறிவித்தலை விடுவதாக தீர்மானிக்கப்பட்டது.

G.P.S எனும் கருவியை சாதாரண கடற்தொழிலாளர்களும் பயன்படுத்தி திசைகளை அறிந்து கொள்ளும் செய்மதி தொடர்பாடல் சாதனம் பற்றிய விளக்கங்களை கப்டன் N.விநாயகமூர்த்தி பகுதி பகுதியாக கற்பிக்க முன்வந்துள்ளார். இதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்யும் பெறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டார். இக்கற்கை நெறியில் பங்கு கொள்ள விரும்புவோர் VaiSWA வுடன் தொடர்பு கொள்ளவும்.

கூட்ட இறுதியில் இது சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றி அறிக்கையில் காட்டப்பட வேண்டுமெனவும் செயலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

அத்துடன் இவ்வறிக்கையையும் பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்களையும் இணைய தளங்களுடாக பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அதற்கான பொறுப்பை புதிய நிர்வாக சபையும் சர்வதேச இணைப்பாளரும் ஏற்றுக் கொண்டனர்.

இணைத்தலைவர்
(S.பாஸ்கரன்)

31.12.2014

செயலாளர்
(க.சுரேந்திரதாஸ்)

**குறிப்பு :** 14.04.2015ல் இருந்து திரு பொ.பாலேந்திரன் செயலாளராக பொறுப்பேற்றுள்ளார்.

நிர்வாக சபையின் இத் தீர்மானம் 06.05.2015ல் நடைபெற்ற வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் (அது ஒரு பொதுச்சபையாக கருதி) அங்கீகரிக்கப்பட்டது.

**2வது ஆண்டில்**

அதாவது 2013க்கான நிர்வாக சபைக்கட்டமைப்பு 29.12.2012ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவரிடையே உருவாக்கப்பட்டது. இதன் பிரகாரம்

| | |
|---|---|
| தலைவர் | திரு. காத்தாமுத்து றஞ்சனதாஸ் |
| உப தலைவர் | திரு. பொன்னம்பலம் சிவானந்தம் |
| செயலாளர் | திரு. இரத்தினசாமி சண்முகதாஸ் |
| பொருளாளர் | திரு. துரைசாமி சத்திவேல் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள் | திரு. இராமநாததாஸன் இராஜேந்திரா |
| | திரு. பாலசுப்பிரமணியம் மீனாட்சி சுந்தரம் |
| | திரு. பொன்னம்பலம் சிவஞானசுந்தரம் |
| | திரு. சங்கர் கிருசாந் |
| | திரு.பொ.பாலேந்திரன் |
| | திரு.வி.கிருஷ்ணமூர்த்தி |
| | திரு.த.யோகேஸ்வரராஜா |
| சர்வதேச இணைப்பாளர் | திரு. நடராசா சிவரெத்தினம் |
| கணக்காய்வாளர் | திரு. ஆறுமுகசாமி நாகலிங்கம் |

**3வது ஆண்டு**

2014க்கான நிர்வாக சபை கட்டமைப்பு 29.12.2013ல் நடைபெற்ற பொதுச்சபைக்கூட்டத்தில் தெரிவான அங்கத்தவரிடையே 13பேரைக்கொண்ட குழுவாக உருவாக்கப்பட்டது. இதனடிப்படையில்

| | **தொலைபேசி இல.** |
|---|---|
| 1. திரு.ஐ.கா.றஞ்சனதாஸ் (தலைவர்) | 077 9786096 |
| 2.தரு.பொ.சிவானந்தம் (உபதலைவர்) | 077 5274986 |
| 3. திரு.இ.சண்முதாஸ் (செயலாளர்) | 077 3699179 |
| 4. திரு.பொ.சிவஞானசுந்தரம் (உபசெயலாளர்) | 0779382357 |
| 5. திரு.து.சத்திவேல் (பொருளாலர்) | 077 3239933 |
| 6. திரு.ந.சிவரத்தினம் (சர்வதேச இணைப்பாளர்) | 077 3945431 0766463289 |
| ஏனைய உறுப்பினர்கள் | |
| 7. திரு.இ.இராஜேந்திரா | 077 3068750 |
| 8. திரு.ந.யோகேஸ்வரராஜா | 077 2321906 |
| 9. திரு.கி.பஞ்சலிங்கம் | 077 6695911 |

10.திரு.வி.கிருஷ்ணமூர்த்தி 0777 531466

11. திரு.உ.செல்வசுந்தரம் 077 1777585

12. திரு.பொ.பாலேந்திரன் 077 82336-

13. திரு.த.சுந்தரமூர்த்தி 0217900808

எமது நிர்வாக சபைக்கு வலுவூட்டுவதற்கென ஒரு உபகுழுவும் தெரிவு செய்யப்பட்டது அவர்களது விபரம் வருமாறு.

1. திரு.கி.சந்திரசேகரம் 0213001819

2. திரு.வி.நிமிலன் 077 6571185

3. இ.கங்காதரன் 077 4446279

4. திரு.பா.அரவிந்தன் 077 8199572

5. திரு.ல.கதிர்நேசன் 077 2030574

6. திரு.தி.பார்த்தீபன் 077 1570869

**2013 – 2014 ஆண்டறிக்கையிலிருந்து நடப்பு ஆண்டுக்கு முந்தைய ஆண்டுகளில் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய செயற்பாடுகள் வருமாறு.**

1. 2012–2013 ஆண்டுகளில் பின்வரும் தலைப்புக்களில் எமது சங்கத்தால் கடிதங்கள், துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு சங்க நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

| திகதி | தலைப்பு | பொருளடக்கம் |
|---|---|---|
| 28/4/2012 | வல்வை இளைஞர்களுக்காக நவீன முறைகளில் கப்பல்துறை சார் கல்வி | Capt. S.Baskaran, Capt. K.Vaithiyakumar ஆகியோர்களால் Projetorமூலமான விளக்கங்கள் |
| January 2013 | Letter of appreciation to Mr.T.Manivasakar | 29.12.2012 ல் நடைபெற்ற எமது 2வது பொதுக் கூட்டத்தில் திரு.T.மணிவாசகர் அவர்கள் வல்வை மாலுமிகள் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகள் பற்றிப் பாராட்டிப் பேசப்பட்டன. அதற்கான ஒரு கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் இணையத் தளங்கள் ஊடாகவும் வெளியிடப்பட்டன. |
| 7/02/2013 | கடலோடிகளாகவும் கப்பலோட்டிகளா கவும் வல்வை மண்ணின் பாரம்பரியத் தை காப்போம், வளர்ப்போம். | இணையத்தளங்களூடாக விசேடமாக புலம்பெயர் வாழ்மக்களுக்காக எமது சங்கத்தின் நோக்கம். எதிர்காலத்திட்டம் என்பன பற்றிய விளக்கங்கள். |

| | | |
|---|---|---|
| 14/3/2013 | Vaiswa வின் அபார முயற்சியால், யாழ்மண்ணில் மாலுமிகளிற்கான கற்கை நெறிகள் ஆரம்பம். | மருதனார்மடத்தில் எமது அனுசரணையுடன் CINEC -Campus ஆரம்பித்து வைக்கப்பட்டமை பற்றிய விழிப்புணர்வு (இணையதளங்கள் ஊடாக தகவல்கள் வெளிப்படுத்தப்படுள்ளன.) |
| March 2013 | அன்பும் கருணையும் கொண்ட வல்வை மண் நலன் விரும்பிகளே | முத்துமாரி அம்மன் திருவிழாக் காண வந்த வெளிநாடுகளில் வசிப்பவர்களை எமது சங்க செயற்பாடுகள் பற்றி அறிய வைத்தமை. |
| March 2013 | கப்பலில் வேலை வாய்ப்புக்கள். | உள்ளூர் பத்திரிகைகள் வாயிலாக கப்பல் துறையில் தொழில் வாய்ப்புக்கள் சம்பந்தமாகவும் உழைக்க கூடிய சம்பளங்கள் பற்றிய விபரங்கள் கொண்டதாகவும் தலைவர் திரு.கா. றஞ்சனதாஸ் அவர்களால் எழுதப்பட்ட 5 பக்கங்கள் கொண்ட கட்டுரை |
| 27/05/2013 | கலந்துரையாடலும் ஒன்றுகூடலும் Discussion and get together | வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களையும் இங்கிருக்கும் நலன் விருமபிகளையும் உள்வாங்கி 28.04.2013 ல் நடாத்தப்பட்ட ஒன்றுகூடலின் நிகழ்ச்சித் தொகுப்பு (இணையதளங்களுடாக வெளிப்படுத்தப்பட்டது) |
| 7/07/2013 | கப்பற்துறை சார் கற்கை நெறிகளுக்கான - சலுகைகள் | G.C.E(O/L) பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் பரீட்சைக்கு தோற்றியிருந்தாலே(C.D.C) கற்கை நெறிகளை மேற்கொள்ளலாம். இது வடகிழக்கு மாகாண இளைஞர்களுக்கான சலுகை |
| 10/10/2013 | இறுதி வாய்ப்பு (Final Chance) | CINEC - Jaffna Campus ல் சேர்வதற்கான அறிவுறுத்லகள் |
| 16/10/2013 | மின் பொறியியல் சார் கற்கை நெறிகள் | E.T.O மற்றும் E.T.R கற்கை நெறிகள் சம்பந்தமான விளக்கங்கள் |
| 01/11/2013 | Vaiswa ற்கு கனடாவில் ஒரு கன்னிக்கிளை | U.Kல் வசிக்கும் திரு.தா.சண்முகதாஸ் அவர்கள் கனடாவுக்கு விஜயம் செய்த பொழுது அங்கு திரு.S.கலிங்கராஜன் அவர்கள் முயற்சியால் எமது சங்கத்தின் ஒரு கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் பல நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்ததுடன் ரூபா 271,595.50 நிதியையும் எமக்குஅனுப்பி வைத்தனர். இதற்கான நன்றிக் கடிதம் இணையத்தளங்கள் ஊடாக வெளியிடப்பட்டது. |

2. கொழும்பிலும் திருமலையிலும் இயங்கிவந்த ஆசியாவிலேயே புகழ்பெற்ற **CINEC என்னும் சர்வதேச கப்பல் தொழில் கற்கை நெறிக்கல்லூரியின் கிளையை யாழ்ப்பாணத்தில் உள்ள மருதனாமடத்தில் நிறுவுவதற்கும்** (16.02.2013) அதற்குரிய மாணவர்களை அறிமுகப்படுத்துவதிலும் மிக முக்கிய பங்களிப்பு எம்மால் வழங்கப்பட்டது. இதனால் எமது வல்வை இளைஞர்கள் மாத்திரமல்லாது வடக்கு கிழக்கைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பலரும் CDC சான்றிதழ்கள் பெற்று வருகின்றனர். தற்பொழுது 8வது தொகுதி (8 Batch) நடைபெற்று வருகின்றது. என்பதனை மீண்டும் ஒரு தடவை நினைவூட்ட விரும்புகின்றோம்.

3. **ஆழக்கடல் வென்றவர்கள் எனும் அன்னபூரணி பற்றிய தொகுப்பு வெளியீடு:-** எம்முன்னோரது கப்பற்றொழில் திறமையையும், வல்வை மக்கள் அன்னபூரணியின் முழு விபரத்தையும் அறியும் பொருட்டும் 100 பக்கங்கள் கொண்ட ஒரு வரலாற்று நூல் வல்வை கலை கலாசார இலக்கிய மன்றத்துடன் இணைந்து (August-2013) எம்மால் வெளியிடப்பட்டது.

4. **11.05.2014ல் நிகழ்ந்த அம்மன் திருவிழாக்கால கலந்துரையாடலும் ஒன்று கூடலும்.** இது பற்றிய ஒரு கண்ணோட்டம் அறிக்கையாக அச்சிடப்பட்டு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றது.

5. **கனடாவில் VaiSWAவின் கன்னிக்கிளை அங்குரார்ப்பணம்:**

   Capt T.சண்முகதாஸ் (U.K) மற்றும் கனடா வாழ் திரு S.கலிங்கராஜன் ஆகியோரின் முயற்சியால் இது ஆரம்பிக்கப்பட்டதுடன் நிதி ரூபாய் 271595/=உம் அனுப்பி வைக்கப்பட்டது.

6. Cadet officer course இதைத் தொடர
   1. திரு யோ.வசந்தான்
   2. திரு ஏ.பிரதீகரன்
   3. திரு பா.ஸ்ரீகரன்

ஆகியோரிற்கு எமது சங்கம் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கியுள்ளது இவர்கள் தற்பொழுதும் தமது கற்கை நெறிகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

**7. பயிற்சிப் பட்டறைகள்:**

இளைஞர், யுவதிகளின் சுய வேலை வாய்ப்பைக் கருத்திற் கொண்டு இரு தொகுதிகளாக ஏறக்குறைய 100 பயிலுனர்களிற்கு துணிகளில் சாயமிடும் கைவழிப்பயிற்சி (Screen Printing)யினை நன்கொடையாளர்களின் உதவியுடன் நடாத்தியுள்ளோம்.

**8. முதியோர், குழந்தைகள் பராமரிப்புக்கான மருத்துவப்பயிற்சி:**

ஒருவருட கால ஆனால் ரூபா 1 லட்சம் வரை செலவு செய்து கற்க வேண்டிய மேற்படி பயிற்சிகளிற்கு எமது சங்கத்தின் சிபார்சின் பேரில் இலவச பயிற்சியளிக்க அரசு சார்பற்ற ஒரு நிறுவனம் முன் வந்தபோதிலும் இதற்காக இணையதள விளம்பரங்களும் எம்மால் மேற்கொள்ளப்பட்ட போதிலும்கூட மிகக் குறைவான எண்ணிக்கையானவர்களே முன் வந்து பயிற்சி பெற்றுத் தேறியுள்ளனர்.

## 9. ETR - Electro technical Rating

பயிற்சி நெறிக்கு VaiSWA வின் சிபார்சுடன் 7 மாணவர்கள் அனுப்பப்பட்டார்கள் இதில் ஓர் இருவரைத்தவிர ஏனையோர் மாலபேயில் உள்ள கல்லூரியில் தமது பயிற்சிகளை பூர்த்தி செய்ததுடன் உரிய சான்றுதழ்களையும் பெற்றுள்ளனர்.

### நடப்பாண்டின் சில முக்கிய நிகழ்வுகள்

1. **28.01.2015 அன்று ஊர்காவற்துறை மைந்தன் Capt S.A.F. சிலுவைதாஸ்** அவர்கள் வல்வை மாலுமிகளிற்கு ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டி சேவை நலன் கௌரவிப்பு விழா நடாத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு சங்க இணைத்தலைவர் Capt N.விநாயகமூர்த்தி அவர்கள் தலைமை தாங்க Capt S.சிவநேசன் உட்பட பல நலன் விரும்பிகள் வல்வை சார்பாக உரைகளை வழங்கியிருந்தனர்.

   விழாவில் கலந்து கொண்ட Capt S.A.F சிலுவைதாஸ் அவர்களுக்கும் பாரியாரிற்கும் நலன்விரும்பிகள் சார்பில் பாராட்டுப்பத்திரமும் நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

Capt N.விநாயகமூர்த்தி அவர்களினால் மரத்திலான சிறந்த சிற்ப வேலைப்பாடுகளும் கலையம்சமும் பொருந்திய கப்பல் சின்னம் விஷேடமான நினைவுப் பொருளாக வழங்கப்பட்டது. (இதன் படத்தை பிறிதொரு பக்கத்தில் காணலாம்)

2. 06.05.2015ல் வல்வை முத்துமாரி அம்மன் திருவிழாக்கால (4வது) ஒன்றுகூடல்.
இது பற்றிய கண்ணோட்ட அறிக்கை சுருக்கமாக கீழே பிரசுரிக்கப்படுகின்றது.

**வல்வை முத்துமாரியம்மன் திருவிழாக்கால (4வது) 06.05.2015 கலந்துரையாடலும் ஒன்று கூடலும்**

எமது வருடாந்த முத்துமாரி அம்மன் திருவிழாக்கால ஒன்று கூடல் நிகழ்வானது 06.05.2015 மாலை 4.30 மணியளவில் வல்வை நகரசபை பொது மண்ணடபத்தில் சங்க இணைத்தலைவர் Capt N.விநாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் கௌரவ விருந்தினர்களாக திரு T.சண்முகதாஸ் அவர்கள் தம் துனைவியுடன் கலந்து கொண்டார். அத்துடன் பிரபல கப்பல் முகவர் திரு S.சாந்தலிங்கம் (White horse Travels) அவர்களும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த ஒன்று கூடலில் நலன் விரும்பிகள் 50 பேருக்கு மேல் கலந்து கொண்டனர்.
பின்வருவோர் சிறப்புழை ஆற்றினார்கள்

**1. Capt. S.சிவநேசன்**

இவர் தனது உரையில், இவ்வாண்டு கடந்த ஆண்டுகளை விட குறைந்தளவான நலன் விரும்பிகளே பங்கு பற்றியதைக் குறிப்பிட்டதுடன், முக்கியமாக மாலுமிகளும் இளைஞர்களும் காணப்படவில்லை என்றும் வருத்தம் தெரிவித்தார் அவர் தனது கடந்த கால கப்பல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன் திரு.T.சண்முகதாஸின் ஆரம்பகால கப்பல் வாழ்க்கை பற்றி குறிப்பாக பாய்க்கப்பல் ஈஸ்வரியில் சமையல்காரராகக் (Cook) கடமையாற்றியதுடன் கடின உழைப்பும் விடாமுயற்சியின் மூலம் படிப்படியாக உயர்ந்து அதிகாரி நிலைக்கு வந்ததுடன் வல்வை இளைஞர்களிற்கு வெளிநாட்டுக்கப்பல்களில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்து முன்மாதிரியாகத் திகழ்ந்ததை எடுத்துரைத்து, அவரைப்பாராட்டினார்.

**2. பேராசிரியர் சபா.இராஜேந்திரன்**

இவரது உரை பின்வருமாறு அமைந்திருந்தது.

திரு பொ.பாலேந்திரன் (செயலாளர்) அவர்களால் வாசிக்கப்பட்ட கடந்த வருட ஒன்றுகூடல் அறிக்கையைக் குறிப்பிட்டு நாம் நிறையக் களைப்படைந்து விட்டோம். இனிமேல் நாங்கள் பாய வேண்டும் என்றும், தற்போது இருக்கும் 50 பேர் வரையான CDC holders ஐ உடனடியாக கப்பல்களிற்கு அனுப்புவது சாத்தியமற்ற போதும் இது சாதிக்கப்பட வேண்டிய விடயமே. இதற்காக நவீன உபகரணங்கள் கொண்ட, கடலில் நாட் கணக்கில் தங்கியிருந்து மீன்பிடிக்கக்கூடிய இழுவைப்படகுகளையும் (Trawlers) வாங்க நாம் முன்வர வேண்டும்.

வல்வை மண்ணில் பிறந்தவர்களிற்கு இயல்பாகவே ஆற்றல்மிக்க மரபணுக்கள் உண்டு நாம் அதனைப் பயன்படுத்த வேண்டும். தேவையற்ற ஆடம்பரமான கொண்டாட்டங்கள் விழாக்கள் போன்றவற்றைத் தவிர்த்து அதற்குச் செலவிடும் பணத்தையும் நேரத்தையும் ஆக்கபூர்வமான விடயங்களில் ஈடுபடுத்தி வீட்டையும் சமூகத்தையும் முன்னேற்ற இளைஞர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறியதுடன் ஒரு தனிநபர் நாளொன்றிற்கு 2–3 மணிநேரம் 30 நாட்களிற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் தன்னை எவரும் ஒரு தொழிலுக்குத் தகுதியாக்க முடியும் என்றார். எந்த அமைப்பிற்கும் தலைமைத்துவம் முக்கியமானது அக்கண்ணோட்டத்தில் பார்த்தால் VaiSWAவில் அது இருக்கின்றது என்று, தான் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

**3. Capt N.கலைநேசன்**

இவர் தனது உரையில் பல காலம் பல பாய்க்கப்பல்களை ஓடிய எமது பரம்பரையில் வந்த திரு T.சண்முகதாஸ் அவர்கள் நவீன கப்பல்களில் வேலை செய்வதற்கு எமது இளைஞர்களிற்கு சந்தர்ப்பங்கள் கொடுக்க முன் நின்று உழைத்தவர் என்று பாராட்டினார் அவர் தனது கப்பல் வாழ்க்கையைக் குறிப்பிட்டு, ஆரம்ப காலத்தில் இருந்து உரிய

கற்கை நெறிகளை மேற்கொண்டமையால், தான் தற்போது Captain ஆக இருப்பதாகவும் அதே போலவே படித்த மாணவர்கள் Cadet ஆக கற்கை நெறிகளை மேற்கொண்டு கப்பல்களில் உயர் பதவிகளை வகிக்க முன்வர வேண்டும் ஆனால் தற்போது அப்படியான நிலை இங்கு காணப்படுவது மிகமிக அரிதாகவே உள்ளது எனக்கவலை தெரிவித்தார். கடந்த காலங்களிலும் சரி தற்போதும் சரி கப்பல்களில் Captains, Chief Engineers போன்றவர்கள் தங்களது சிபார்சின் பேரில் கப்பலில் வேலை வாய்ப்புக்களை எமது இளைஞர்களிற்கு பெற்றுக் கொடுப்பதில் அசமந்தப் போக்கே காணப்படுகின்றது. ஒரு சிலர் இதற்கு விதி விலக்காகவும் உள்ளனர். என்னைப் பொறுத்த வரை தன்னாலான உதவிகளை இவ்விடயத்தில் செய்வதில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**4. திரு M.K. சிவாஜிலிங்கம் (மாகாண சபை உறுப்பினர்)**

யுத்தத்தினால் சீரழிந்த வல்வை நகர் தனது அபிவிருத்தியில் எவ்வாறு பின்னடைவைக் கண்டுள்ளதோ அதே போலவே எமது சங்கமும் உத்வேகம் குறைந்து வருவதை நான் உணர்கின்றேன் இது ஒரு பொதுவான போக்கே இவ்விடயத்தில் சிதம்பரக் கல்லூரி பற்றியும் ஒப்பிட்டுப் பேசினார். எனவே VaiSWA ஒரு புதிய கப்பல் கம்பனியை ஆரம்பித்து, அதை (BOI) இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்து 20 வருட கால வரிச்சலுகையினைப் பெறக்கூடிய சந்தரப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். இதற்குரிய முதலீடுகளைத் திரட்டவும் வாய்ப்புகள் உள்ளன. ஆதிகோவிலடிப் பிள்ளையினர் படிப்பில் முன்னேற்றமடைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது எனவும் குறிப்பிட்டார். எனவே சகலரின் ஒத்துழைப்பையும் பெற்று VaiSWA வின் திட்டங்கள் விரிவுபடுத்தப்படல் வேண்டும் என்றார்.

**5. கௌரவ விருந்தினர் திரு T.சண்முகதாஸ்**

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட இவர், கப்பல் என்றால் சண்முகதாஸ் என்றால் கப்பல் எனும் அளவிற்கு மாலுமிகளிடையேயும் மக்களிடையேயும் பிரசித்தமானவர் இவர் தனது உரையில் ஆரம்பகாலக்கடின கப்பல் வாழ்க்கையைக் குறிப்பிட்டு அதில் திரு A.அம்பலம் மாஸ்டர், திரு T.மணிவாசகர், போன்றோர் கப்பல் துறையில் ஆர்வம் காட்டடியதை குறிப்பிட்டதுடன் ஈஸ்வரி கப்பலில் தூத்துக்குடி கொழும்பு சேவைக்காலத்தில் (சம்பளம் இல்லாமலும் கூட) தான் மூட்டை தூக்கி சாப்பாட்டுக்கு உழைத்ததையும் குறிப்பிட்டார். அத்துடன் சமையல்காரராக (Cook) 150 ரூபா சம்பளத்துக்கு அதுவும் சப்பாத்து இல்லாத கால்களுடன் வேலை செய்ததாகவும் குறிப்பிட்டார். அம்பலம் மாஸ்டரின் tug boatல் ஒளித்துப்போய் கப்பலேறிய அனுபவத்தையும் கூறி, Capt S.A.F.சிலுவைதாஸ் அவர்களின் உதவிகளைப் பற்றியும் குறிப்பிட்டார். எத்தனையோ எமது இளைஞர்களிற்கு தான் உதவியபோதும் Jumping அதாவது கப்பலை விட்டு பாய்வது சாவக்கேடாகவே உள்ளது என்றார். கனடாக்கிளை அங்குரார்ப்பணம் முயற்சி பற்றியும் எடுத்துரைத்தார். எமது சங்கத்தின் செயற்பாடுகளிற்கு எதிர்காலத்திலும் உதவிபுரிய ஆவலாகவுள்ளதாகக் கூறி அமர்ந்தார்.
(இவர் தனது கொள்கையாக வல்வையில் வீட்டிற்கு ஒரு மாலுமியை உருவாக்க வேண்டும் என வரித்துக் கொண்டவர். )

**அடுத்துப் பேசிய திரு S.தெய்வச்சந்திரன் (மாமாச்சி–UK)** தனது உரையில் நவீனயுகத்தில் வல்வையைச் சேர்ந்த சகல மாலுமிகளதும் CDC மற்றும் தகமைகள் பற்றிய விபரங்கள் யாவும் VaiSWA வினால் இணைய தளங்களில் பிரசுரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் UK life மிகவும் கஷ்டமானது. குட்டிமணியண்ணா கூறியது போல £1000, £1500 பவுண்ஸ்களுக்கு மண்டபங்களை வாடகைக்கு எடுத்து, இதர செலவுகளையும் செய்து ஒரு வைபவத்தை நடாத்துகின்ற போது 30–35 மக்களே பங்கு பற்றுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. வல்வையில் ஒரு scrap yard ஐ உருவாக்குவதன் மூலம் இளைஞர்களிற்கு வேலை வாய்ப்பினை வழங்க முடியும். அத்துடன் நகரசபை மண்டபத்தில் இருந்த பழைய நகர சபைத் தலைவர்களின் படங்களைப் பார்த்து, அவர்களது சேவையைப் பற்றியும், முக்கியமாக திரு S.ஞானமூர்த்தி அப்பாவின் சேவைகளைக் குறிப்பிட்டு அவர்களின் கனவுகளை நனவாக்க VaiSWA தனது சக்தியைப் பயன்படுத்த முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

வல்வெட்டித்துறையில் பாய்மரக் கப்பல்கள் ஓடிய காலங்களில் தண்டயல்களாக அதாவது Captain களாக இருந்து சாதனை படைத்தவர்களைப் பற்றிக் கூறி தனது அறிவுக்கு எட்டிய வரை இச்சபையில் அமர்ந்திருக்கும் திரு பொ.சிவானந்தம் அவர்களின் தந்தையாகிய திரு பொன்னுத்தண்டயலே (Capt. K.பொன்னம்பலத்தினால் 100 வருடங்களுக்கு முன் பெறப்பட்ட Master certificateன் பிரதிப்படம் பின்னால் இணைக்கப்பட்டுள்ளது.) எனவே

இப்பரம்பரையில் வந்த நாங்கள் VaiSWA வின் உதவியுடன் பல சாதனைகளைப்புரிய முன் வர வேண்டும். VaiSWAவிற்காக ஒரு காரியாலயம் இல்லை என்பதையும் நான் அறிய வந்துள்ளேன். தேவையாயின் தனது வண்ணாவளவில் உள்ள வீட்டில் ஒரு அறையைத்தருவதற்கு ஆயத்தமாகவுள்ளேன் எனவும் கூறி உற்சாகப்படுத்தினார். (Captain K.பொன்னம்பலம்(பொன்னுத்தண்டையல்) அவர்களின் Captain certificateன் பிரதிப்படம் அதற்கு 100 வயது பின்னால் இணைக்கப்பட்டுள்ளது)

**அடுத்து பேசிய கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட திரு.S.சாந்தலிங்கம்** (கப்பல் முகவர்) தன்னைக் கௌரவப்படுத்தியமைக்கு நன்றி கூறியதுடன் தான் ஆரம்பகாலத்தில் சுங்கத் திணைக்களத்தில் (Customs) பணிபுரிந்ததாகவும் பின்னர் white horse travels என்ற பெயரில் பிரயாண முகவர் நிலையத்தை நடாத்தியதாகவும் அக்காலப்பகுதியில் தற்போது இளைப்பாறியிருக்கும் Chief officer திரு V.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தொடர்பு ஏற்பட்டு வல்வை இளைஞர்களிற்காக செய்யக்கூடிய உதவிகளை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் கப்பல்களிற்குச் செல்லும் இளைஞர்களிற்கான விமான பயணச் சீட்டுக்களை (Air Tickets) மிகக் குறைந்த சலுகை விலையில் வழங்கி வல்வை மண்ணிற்கான எனது கடமையை நிறைவேற்றியுள்ளேன். இவற்றிற்கெல்லாம் காரணமாகவிருந்த திரு V.கிருஷ்ணமூர்த்தியை இச்சந்தர்ப்பத்தில் நன்றியறிதலுடன் நினைவு கூருகின்றேன் என்றார்.

3. **பிரபல கப்பல் தொழில் அதிபர் திரு தா.மணிவாசகர் அவர்கள் (15.09.2015ல்) கௌரவிக்கப்பட்டார்கள்.** அதுபற்றிய கண்ணோட்டம் ஒரு அறிக்கையாக ஏற்கனவே அச்சிடப்பட்டு நலன்விரும்பிகளிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. (அவருக்கு வழங்கப்பட்ட வாழ்த்து மடலின் பிரதியும் இத்துடன் பின் இணைப்பாக உள்ளது.)

4. G.P.S கற்கை நெறி

   எமது அனுசரணையுடன் யாழ் சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் 2 வார G.P.S கற்கைநெறியினை 7 பேர் கற்று தேறியுள்ளனர்.

## கணக்காய்வாளருக்கு நன்றி

**வல்வை மண்ணுக்காக எமது சங்கக் கணக்குகளை வருடாந்தம் ஆய்வு செய்து வரும் கணக்காய்வாளர் திரு.ஆ.நாகலிங்கம் அவர்களுக்கு நாம் எமது நன்றிகளை வல்வெட்டித்துறை மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.**

**நிர்வாகம்**

# வல்வை மாலுமிகள்
# நலன்புரிச் சங்கத்தின் ஊடாக வல்வை மக்களுக்கு
# உதவிக்கரம் நீட்டியவர்களது விபரம்

| | | |
|---|---|---|
| 01. Capt N. கலைநேசன் (ஒரு மின்பிறப்பாகியுடன்) | 2,000.00 | |
| 02. அருட்செல்வன் & GK.ராஜன் | 57,150.00 | |
| 03. Capt K. வைத்தியகுமார் | 15,000.00 | (10,000 + 5000.00) |
| 04. Capt R. ராஜேந்திரா | 16,200.00 | (10,000 +6200) |
| 05. 3rd Eng. S. யோகராஜன் | 5,000.00 | |
| 06. Capt N. விநாயகமூர்த்தி | 20,000.00 | (10,000 + 10,000) |
| 07. CH. Eng. N. ஜெயவீரசிகாமணி | 10,000.00 | |
| 08. 2nd Eng. V. முருகதாஸ் | 10,000.00 | |
| 09. Capt S. மணிவண்ணன் | 10,000.00 | |
| 10. Capt S. சிவநேசன் | 15,000.00 | (10,000 + 5000.00) |
| 11. 2nd Eng S. சிவகுமார் | 5,000.00 | |
| 12. Ch.Off. V. முருகவேல் | 22,000.00 | (12,000 + 10,000.00) |
| 13. Banker N. சிவரெட்ணம் | 2,000.00 | |
| 14. Ch. Eng. S. பாலேந்திரன் | 25,000.00 | |
| 15. Capt. S. பால்ராஜ் | 60,000.00 | |
| 16. திரு P. அருட்குமரன் (White horse ageny) | 5,000.00 | |
| 17. 2nd Off. P. சண்முகராஜா | 13,000.00 | |
| 18. திரு ச. சுரேந்திரதாஸ் (லண்டன்) | 41,695.00 | |
| 19. திரு T. முரளிதரன் (நலன் விரும்பி - கொழும்பு) | 10,000.00 | |
| 20. VaiSWA வின் கனடாக்கிளை | 271,595.00 | |
| 21. A. இராஜசேகரம் (Australia) | 31,500.00 | |
| 22. VaiSWA தலைவர் C.றஞ்சனதாஸ் | 5,000.00 | |
| 23. Ch. Off. V. கிருஷ்ணமூர்த்தி | 12,000.00 | |
| 24. திரு A. நகுலேஸ்வரன் (கடற்செல்வம்) | 25,000.00 | |
| 25. பூரணம் முதியோர் உதவி ஊக்குவிப்பு நிதியம் (UK) | 25,000.00 | |
| 26. திரு ஸ்ரீதர் (கால்நடைத் தீவனம்) | 5,000.00 | |
| 27. திரு T. மணிவாசகர் (Malasia) | 60,000.00 | |
| 28. பெயர் குறிப்பிடப்படாத நலன் விரும்பி (UK) | 50,000.00 | |
| 29. திரு S. இராஜேந்திரன் (பேராசிரியர்) | 2,000.00 | |
| 30. திரு P. சிவானந்தம் (VaiSWA உபதலைவர்) | 5,000.00 | |
| 31. திரு V.P. பாலேந்திரன் | 5,000.00 | |
| 32. Capt S. செந்தில்குமார் (கொழும்பு) | 4,000.00 | |
| 33. திரு P. தியானமூர்த்தி (சிவகாமி இரும்பகம்) | 5,000.00 | |
| 34. திரு T. சுந்தரமூர்த்தி(VaiSWA பொருளாளர்) | 1,000.00 | |
| 35. திரு V.சிவநேசன் (நெடியகாடு) | 1,000.00 | |
| 36. திரு M. ராதாகிருஷ்ணன் (ஆலடி ஒழுங்கை) | 1,000.00 | |
| 37. திரு K. ரவீந்திரன் (தீருவில்) | 1,000.00 | |
| 38. திரு K. ரவீந்திரன் (Australia) | 5,000.00 | |
| 39. திரு N. பாலேந்திரன் (ஆலடி ஒழுங்கை) | 1,000.00 | |
| 40. திரு M. குகநேசன் (சிவன்கோவிலடி) | 10,000.00 | |

41. திரு S. உமாபதி (சிவன்கோவிலடி) 5,000.00
42. திரு S. சிவகுமார் (ஊரிக்காடு) 5,000.00
43. திரு S. குழந்தைவேல் (Marine Superintendent) 20,000.00
44. 18.08.13ல் "ஆழக்கடல் வென்றவர்கள்" புத்தக வெளியீட்டு விழாவில் சேர்த்தது 21,300.00
45. S. சாந்தலிங்கம் (கப்பல் முகவர்) 10,000.00

## 2015ல் அன்பளிப்புகள்

1. Capt N.விநாயகமூர்த்தி 10,000.00
2. Capt. R.ராஜேந்திரா 5,000.00
3. Capt. S.சிவநேசன் 1,000.00
4. Capt. T.சண்முகதாஸ் 25,000.00

## குறிப்பு

அன்பளிப்பு சம்பந்தமாக இவ்வறிக்கையில் ஏதாவது தவறுகள் இருப்பின் எமக்கு அது பற்றி அறியத்தருமாறு கேட்பதுடன் அவ்வாறான தவறுகளுக்கு இத்தால் மன்னிப்பும் கோருகின்றோம்.

நிர்வாகம்
VaiSWA
10.01.2016

**வல்வை நலன்விரும்பிகளது ஒத்துழைப்பு வல்வை மாலுமிகளுக்கு மட்டுமல்லாது எம் மண்ணிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கும் அவர்தம் வாழ்வை வழம்படுத்த பேருதவியாக இருக்கும்**

## இழுவைக் கப்பல்களில் எம்மவர்

அந்தக்காலத்தில் கொழும்புத்துறைமுகத்தில் இழுவைப்படகுகளில் (Tug boats) எமது ஊரவர்கள் பலர் Master மற்றும் Mate தரங்களில் வேலை செய்து ஓய்வு பெற்றிருக்கிறார்கள். 1968 – 1970ம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப்படம் கொழும்புத் துறைமுகத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பிரிவு உபசார விழாவாக இருந்திருக்க **வேண்டும்.** அக்காலத்தில் கொழும்பு துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான "சுராணிமாலா" "ஹேர்கூலிஸ்" என்ற இரு இழுவைக் கப்பல்களும் தரித்து நிற்பதை படத்தில் காணலாம். இவைதனில் பறங்கியர் எமது ஊரவர்களுடனும் ஊர்காவற்றுயைச் சேர்ந்தவர்களுடனும் வேலைசெய்துள்ளார்கள்.

இப்படத்தில் அடையாளம் காணப்பட்ட எமக்குத் தெரிந்த சிலரின் பெயர்களை குறிப்பிடுகின்றோம். இவர்களைத் தவிர்ந்த ஏனையோர்களை தமக்கு தெரிந்தவர்கள் எமக்குத் தெரியப்படுத்தினால் இதனை இன்னொரு ஆக்கத்திற்கு பிரசுரிக்க உதவியாக இருக்கும். (பக்கம் 20)

படம் தந்து உதவியவர்
செங்கல்வராசா சா.சக்திவேல்

அன்பளிப்பு செய்தவர்
பொ.சிவானந்தம்

## வல்வையின் முதலாவது Master certificate பொன்னுத்தண்டயலுக்கு

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்ற முதுமொழிக்கிணங்க எமது வல்வை மக்கள் தொன்று தொட்டு இன்று வரை கடலோடி பொருளீட்டி வருகின்றனர். பொன்னுத்தண்டயல் என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு குமாரசாமி பொன்னம்பலமும் பரம்பரைபரம்பரையாக கப்பல் ஓட்டிகள் வழியில் வந்தவரே. இவர் தண்டயல் முருகுப்பிள்ளை குமாரசாமி மகனாக 19.01.1983ல் பிறந்தார். மாலுமி சாஸ்திரங்களை நன்கு கற்றுத்தேறி 24.01.1916ல் கொழும்பில் தண்டயல் Master தராதரச் சான்றிதழைப் பெற்றிருந்தார்.

இந்தியாவின் தமிழ் நாட்டு தேவகோட்டையைச் சேர்ந்த திரு நாகப்பச் செட்டியார் அவர்களிற்குச் சொந்தமான “விநாயக சவ்பாக்கியலெட்சுமி” என்ற கப்பலில் இவர் வேலை செய்யும் காலத்தில் இந்தியத் துறைமுக நடைமுறைக் கேற்ப மதராஸிலும் (Madras-Chennai) தண்டயல் (Master) சான்றிதழ் (17.03.1919) பெற்றிருக்கின்றார். வியக்க வைக்கும் எமது மண்ணின் மகிமைக்கு இவையிரண்டு ஆவணங்களும் சான்று பகிர்கின்றன.
இவை எம்மால் (VaiSWA) ஆவணப்படுத்தப்படுகின்றன. (பக்கம் – 21–23)


**Sometimes the wrong choices bring us to the right places -Author Unknown**

**Your life doesn't get better by chance. It gets better by choice -Author Unknown**



**மேல்வரிசை [இடமிருந்து வலம்]** 1.Master கணேஸ் (வல்வை–பருத்தித்துறை), 3. Mate மா.கணேஸ் (வல்வை சிவன்கோயிலடி), 5. Master செல்லையா (வல்வை), 6. Master ஈஸ்வரலிங்கம் (நெடியகாடு வல்வை), 7. Master **கந்தவனம் செல்வரத்தினம் [கதிரையாண்டி – வல்வை]**, 9. தேவசிகாமணி **[ஆலடி வல்வை]**

கீழ்வரிசை **[இடமிருந்து வலம்]** 2. Master சிவசுந்தரமூர்த்தி, 7. Master ஐ.இரத்தினசாமி, 11. Master அரு.அம்லவாணர்



CERTIFICATE OF COMPETENCY.

No. 2[illegible]

By virtue of authority vested in us by Government Notifications dated *18 th August 1913 & 24th April, 1914* we hereby certify that *Kumaraswamy Ponnampalam of Valvettiturai Jaffna*

has passed the Examination required by Ordinance No. 3 of 1888, and is entitled to this Certificate of Competency as Master in the Coastwise Trade.

*Given under our hands at Colombo, this 24 th day of January, 1916*

*Principal Collector of Customs.*

*Master Attendant.*

Bearer's Name.- Kumarasamy Ponnambalam. (Holds Certificate of Competency as Master, granted at Colombo by the Ceylon Government, No.241, dated 24/1/'15.

Father's Name.- Kumarasamy.

Date and Place of Birth.- January 1893, Valvettiturai.

Residence showing village, Taluq and District.- Valvettiturai, Jaffna.


Height.- 5 Feet 3½ Inches.

Personal marks for identification.- Short and well built.
A scar on the face in the middle of the forehead.
A scar (one inch) near the right elbow.
A black mole on the front part of neck on the left side.

Photograph.



Left Thumb Impression.



கு-பொன்னம்பலம்

Signature.

(Any Master or Mate whose certificate is lawfully cancelled or suspended and who fails to deliver up the same forthwith, is liable to be punished with fine which may extend to Rs.500/-.)

N.B.- Any person other than the owner becoming possessed of this certificate is required to transmit it forthwith to the Presidency Port Officer, Madras.

ISSUED AT MADRAS ON THE SEVENTEENTH DAY OF MARCH ONE THOUSAND NINE HUNDRED AND NINETEEN.

Captain, R.I.M.,
Presidency Port Officer.

BY THE GOVERNOR OF FORT ST. GEORGE IN COUNCIL.

---

C E R T I F I C A T E   O F   C O M P E T E N C Y

as

MASTER of A HOME TRADE SAILING VESSEL OF A BURTHEN NOT EXCEEDING 1000 TONS UNDER ACT I OF 1859.

---

To

KUMARASAMY PONNAMBALAM.

WHEREAS it has been reported to me that you have been found duly qualified to fulfil the duties of MASTER of a Home-trade Sailing Vessel of a burthen not exceeding 1000 tons and that you have given satisfactory evidence of your sobriety, experience, ability and general good conduct on Boardship, I do hereby, in virtue of the authority vested in me under Section 11 of Act I of 1859 by the Governor of Fort St. George in Council, grant you this Certificate of Competency.

Given under my hand and seal this seventeenth day of March One thousand Nine hundred and Nineteen.

(By Order of the Governor of Fort St. George in Council.)

PRESIDENCY PORT OFFICE
1[illegible]-MAR. 1919
MADRAS

Madras.

Captain, [illegible],
Presidency Port Officer.

(Registered at the Office of the Presidency Port Officer, Madras.)

Captain, [illegible],
Presidency Port Officer.



NEWLY ELECTED VAISWA'S COMMITTEE  MEMBERS-2016

KALPANA
STUDIO

கப்ரன் S.A.F. சிலுவைதாஸ் அவர்களின் (28.01.2015) கௌரவிப்பு விழா





4வது (06.05.2015) ஒன்று கூடலின் போது திரு T.சண்முகதாஸ் மற்றும் திரு S.சாந்தலிங்கம் ஆகியோரின் கௌரவிப்பு விழா





திரு T.மணிவாசகர் அவர்களின் (15.09.2015) கௌரவிப்பு விழா





# வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் (VaiSWA)

2014 November 15 இலிருந்து 2015 November 30ம் திகதி வரையான

மொத்த கணக்குகளின் விபரம்

| விபரம் | வரவு | | செலவு | |
|---|---|---|---|---|
| | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| ***வரவுகள்*** | | | | |
| ஆரம்ப இருப்பு 2014 Nov 14ம் திகதி உள்ள படி | | | | |
| வங்கி 225,170.64 | | | | |
| காசு 10,267.00 | 235437 | 64 | | |
| அன்பளிப்புக்கள் | 62,186 | 00 | | |
| சந்தாக்கள் | 33,100 | 00 | | |
| கடன்வசூல் (மேலதிக உபகாரப் பணம் ரூ15,000/- உட்பட) | 165,000 | | | |
| சேமிப்புக்கணக்கு வட்டி | 6,743 | 64 | | |
| | 502,467 | 28 | | |
| ***செலவுகள்*** | | | | |
| நானாவித செலவகள் | | | 1831 | 00 |
| 4வது பொதுக் கூட்டச்செலவு | | | 14850 | 00 |
| Cap S.A.F சிலுவைதாஸ் அவர்களின் கௌரவிப்புச் செலவுகள் (28.01.2015) | | | 11,750 | 00 |
| அச்சுக்கூட கொடுப்பனவுகள், பதாதைகள், விளம்பரங்கள், அறிக்கைகள் முதலியன (இவ்வருடத்திற்கானவை) | | | 12650 | 00 |
| இணையத்தள வருடாந்த கொடுப்பனவு | | | 10,000 | 00 |
| அம்மன் திருவிழாக்கால ஒன்றுகூடல் சம்பந்தமான செலவுகள் | | | 11,325 | 00 |
| வழங்கிய கடன்கள் | | | 200,000 | 00 |
| GPS கற்கை நெறிக்காக ஏற்பட்ட செலவுகள் | | | 8,320 | 00 |
| பிரதேச செயலகத்திற்கு முதியோர் கௌரவிப்பு - நிகழ்விற்காக வழங்கியது | | | 5,000 | 00 |
| மொத்தச் செலவு | | | 275,726 | 00 |
| இறுதி இருப்பு (30.11.2015) | | | | |
| வங்கி 221914.28 | | | | |
| காசு 4827.00 | | | 226741 | 28 |
| | 502467 | 28 | 502,467 | 28 |

எம்மால் உறுதி செய்யப்படுகிறது.

இணைத்தலைவர்
Capt. N.விநாகமூர்த்தி

செயலாளர்
பொ.பாலேந்திரன்

நான் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சத்தின் நவம்பர், 15 2014 இலிருந்து நவம்பர் 30, 2015 வரையான காலப்பகுதிக்கான கணக்குள் சமர்ப்பிக்கப்பட்டு செலவுப் பற்றுச் சீட்டுக்கள், செலவுச் சிட்டைகள், வங்கிப் பற்றுச் சீட்டு, வங்கிப்புத்தகம் என்பவற்றின் உதவியுடன் பரிசீலித்து கணக்குப் புதிவுகள் உரிய முறையில் இடம் பெற்றுள்ளமையை உறுதிப்படுத்துகின்றேன்.

ஆ.நாகலிங்கம்
கணக்காய்வாளர்

**பிரபல கப்பல் தொழிலதிபர் திரு.தா.மணிவாசகர் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 15.09.2015 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் வல்வை நவீன சந்தை மேல்மாடியில் இணைத்தலைவர் திரு R.ராஜேந்திரா தலைமையில் இடம்பெற்றது**

**இதுபற்றிய ஒரு கண்ணோட்டம்.....**

திரு.திருமதி மணிவாசகரும் குடும்பத்தவரும் வல்வைச் சந்தியிலிருந்து மாலைகள் அணிவித்து, அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. வல்வை முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு வணக்கத்திற்குரிய திரு.சோ.தண்டபாணி தேசிகரின் இறைவணக்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. நிகழ்ச்சியில் பலரும் திரு தா.மணிவாசகரின் சேவையை பாராட்டினர். ஆண்களும் பெண்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த போதும் இளைஞர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டதையிட்டு சபையோர் விசனம் தெரிவித்திருந்தார்கள். திரு.தா.மணிவாசகர் அவர்கட்கு வாழ்த்து மடல், நினைவுச்சின்னங்கள் என்பன கையளிக்கப்பட்டன, இருவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். தனது ஏற்புரையில் பேசிய திரு.தா.மணிவாசகர் அவர்கள் தனது இந்த உயர்ச்சிக்கு வல்வை மாலுமிகள்தான் காரணம் என்று கூறியிருந்தது மிகவும் பாராட்டத்தக்கதொன்று. நிகழ்ச்சியை VaiSWA வின் அங்கத்தவர் திரு பொ.சிவஞானசுந்தரம் தொகுத்து வழங்கினார். வரவேற்புரையை சங்கத்தின் சர்வதேச இணைப்பாளராகிய திரு N.சிவரட்ணம் நிகழ்த்த தலைமையுரையை VaiSWAவின் இனைத்தலைவர் திரு R.ராஜேந்திரா ஆற்றியிருந்தார். அவர் தனது உரையில் எமது சங்கம் இளைஞர்களை / மாணவர்களை கப்பலிற்கு தூண்டி அவர்களது கல்வியைத்திசை திருப்புவதாக பரவலாக இருக்கின்ற குற்றச்சாட்டை மறுதலித்து, கப்பலில் வேலை செய்து படித்து ஒரு அதிகாரியாக வருவது (Officer, Engineer) பல்கலைக்கழகங்களில் படித்துப்பட்டம் பெறுவதற்கு ஒப்பானது. இன்னும் அதனைவிட ஊதியமும் மிகமிக அதிகம். கப்பலில் இளநிலை அதிகாரியாக (Cadet) படிப்பதற்கு G.C.E (A/L)ல் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்று சித்தி பெற்றிருக்க வேண்டும் என்றும் மாணவர்கள் வர்த்தக மற்றும் கலைத்துறைகளைத் தவிர்த்து விஞ்ஞான, கணித பிரிவுகளைத் தேரந்தெடுத்து முறையாகப் பயின்றால் நல்ல நிலைக்கு வர முடியும். ஏனைய துறைகளைப் போன்று கப்பல்துறையும் ஒரு வளமான பயன் உள்ள துறைதான் என்று சுட்டிக் காட்டினார்.

அடுத்து சிறப்புரை ஆற்றியோர்களின் வரிசையில், பேசிய கப்டன் S.சிவநேசன் தனது உரையில், பொருளாதாரத்தில் வல்வைநகர் (70களில்) ஒரு மிக நெருக்கடியான காலகட்டத்தில் இருந்தது. அப்போது திரு தா.மணிவாசகர் தனது முயற்சியால் பல இளைஞர்களுக்கு வெளிநாட்டு கப்பல்களில் தொழிலை வழங்கியதன் மூலம் அன்றைக்குத் தங்களது எதிர்காலம் என்னவென்று தெரியாமல் மனம் கலங்கியிருந்த, சோர்ந்திருந்த இளைஞர்களுக்கு ஒரு கலங்கரை விளக்குப் போல வழிகாட்டினார் என்றார்.

கப்டன் S.பாலராஜன் சிறப்புரையில் திரு மணிவாசகரின் வழிகாட்டுதலினால் அவரது கப்பல் நிறுவனத்தில் இளநிலை அதிகாரியாக தனது மாலுமித் தொழிலை ஆரம்பித்து இன்று ஒரு உயர்தர கப்டனாக இருப்பதற்கும், தனது குடும்ப வளர்ச்சிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் திரு மணிவாசகர்தான் அடிக்கல் நாட்டினார் என்று நன்றி பாராட்டினார்.

தொடர்ந்து எமது சங்க உபதலைவர் திரு P.சிவானந்தம் அவர்கள் தனது உரையில் திரு மணிவாசகர் அவர்கள் ஊரிற்கும், ஊர் இளைஞர்களிற்கும் ஆற்றிய அளப்பரிய சேவையை பாராட்டியிருந்தார். தொடர்ந்து நலன்விரும்பி திரு S.தர்மலிங்கம் (Rtd.Asst. Commissiner of Labour) திரு.மணிவாசகரின் ஆற்றலையும் ஊர்மீது அவர் கொண்டுள்ள பற்றுதலையும் ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினார். நான் இந்த ஊரைச் சேர்ந்தவராக இல்லாவிட்டாலும் இப்படிப்பட்ட சாதனையாளர்கள் வசிக்கும் மண்ணில் வாழ்வதில் பெருமை அடைவதாகவும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வடமாகாணசபை உறுப்பினருமான திரு M.K.சிவாஜிலிங்கம் ஆற்றிய உரையில் அன்றைய நாட்களில் ரேவடிக்கடலில் பெரும் எண்ணிக்கையான பாய்க்கப்பல்கள் தரித்து நின்று வர்த்தகம் செய்ததாகவும், அநேக கப்பல் முதலாளிகளும், தண்டையல்களும், சுக்கானிகளும் கப்பல் வாணிபத்தில் கொடிகட்டிப்பறந்ததாகவும். ஆனால் காலப்போக்கில்

அரசியல் மாற்றத்தினாலும் கப்பல் தொழில் நவீனமயப்படுத்தப்பட்டதாலும், அத்தொழிலை தொடர முடியாதமையினால் வல்வை மக்கள் மாற்று வழியாக கள்ளக் கடத்தல் என்று ஏனையோரால் சொல்லப்படுகின்ற சட்டவிரோத பண்டமாற்றுத் தொழிலை செய்து வந்ததாகவும் கூறினார். அத்தொழிலும் எல்லோரினதும் வாழ்க்கையை மேம்படுத்தவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் எமது ஊர் பொருளாதாரத்தில் மிகவும் நெருக்கடியை சந்தித்திருந்த வேளையில், திரு மணிவாசகர் ஆரம்பித்து வைத்த வெளிநாட்டுக்கப்பல் வேலைவாய்ப்புக்களைப் பயன்படுத்தி பலர் தமது திறமைகளை வெளிக்கொண்டு வந்ததன் மூலம் எல்லோரது வாழ்க்கைத்தரமும் உயர்ந்தது என்றார்.

சிறப்புரையில் தொடர்ந்து சங்க பொருளாளர் திரு K.சுந்தரமூர்த்தியும் ஒரு சில வரிகளில் திரு மணிவாசகரின் சேவையைப் பற்றி பேசினார்.

திரு இ.ஞானசேகரமும் (கட்டி மேத்திரியார்) வல்வையின் மூத்த மாலுமியான திரு து.நவரத்தினம் (வாடி ஒழுங்கை வயது 94) ஐயா அவர்களும் திரு. மணிவாசகர் தமக்கு வழங்கிய அரிய சந்தர்ப்பங்களையும் நினைவு கூர்ந்தனர்.

இந்நிகழ்வில் சிறப்பம்சமாக Valvettiturai.org நிறுவனத்தின் சார்பாக capt.A.ஆசுதன் நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி திரு மணிவாசகரை கௌரவித்தார்.

விழாவிற்கு வந்திருந்த பல அபிமானிகள் மாலைகள் அணிவித்தும் பொன்னாடைகள் போர்த்தியும் தமது மரியாதையையும் கௌரவத்தையும் செலுத்தினார்கள்.

எமது சங்கத்தால் “வாழ்த்து மடலும், நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன. வாழ்த்து மடலை சங்க செயலாளர் திரு. பொ. பாலேந்திரன் வாசிக்க அதனை சர்வதேச இணைப்பாளர் N.சிவரட்ணம் வழங்கினார். நினைவுச் சின்னத்தை விழாவின் தலைவர் திரு R.ராஜேந்திரா வழங்கி சிறப்பித்தார்.

அத்துடன் திரு. பா. உதயகுமார் (தங்கத்தமிழன்) சிறந்ததோர் கவிதையை வாசித்து பிரதம விருந்தினர் உட்பட சபையோரின் பாராட்டுகளைப் பெற்றார். இக்கவிதையானது பின்னர் அச்சிடப்பட்டு திரு. மணிவாசகர் அவர்கட்கு வழங்கப்பட்டது.

திரு. தா. மணிவாசகர் தனது ஏற்புரையில் பின்வரும் கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

1. இளைஞர்கள் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்திகளைப் பெற்று கப்பற்றுறை மாத்திரமல்லாது ஏனைய துறைகளிலும் (Aeronautical and IT etc.) படிக்க ஆர்வம் காட்ட வேண்டும்.
2. Aeronautical துறைக்கு தற்போது நல்ல தரமான வேலை வாய்புக்கள் உண்டு. எனவே இளைஞர்கள் தேவையான தகைமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
3. கப்பல் தொழில் எமது பாரம்பரிய தொழிலாக இருந்தாலும் வெறுமனே CDC எடுத்து சாதாரண தர கடலோடியாக போய்வந்து வாழ்க்கையை வீணடிக்காமல் தேவையான Sea Service கிடைத்ததும் Navigation கற்கை நெறியை மேற்கொண்டு உயர் பதவிகளை அடைய முயற்சிக்க வேண்டும்.
4. மேலும் இத்துறையில் இருந்து விலகி தத்தமது தகுதிக்கு ஏற்ப O/L, A/L முடித்த உடனேயே பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்க்காமல் தமக்கு விருப்பமான துறைகளில் தம்மை ஈடுபடுத்தி ஒரு எதிர்காலத்திட்டத்துடன் செயற்பட வேண்டும். இதற்கான வழிகாட்டல்களை உங்களுக்கு VaiSWA வழங்கத்தயாராக இருக்கிறது என நான் நம்புகிறேன்.
5. நீங்கள் எந்தவொரு செயற்படக் கூடிய திட்டத்தையும் நடைமுறைப்படுத்த தேவையான உதவிகளைச் செய்ய நான் தயாராக உள்ளேன்.
6. நான் அறிந்த ஒரு உண்மையையும் இங்கு கூறித்தான் ஆக வேண்டும். அதாவது :


தற்போதைய இளைஞர் யுவதிகள் தத்தமது கல்வி தகைமைகளையும் மீறி எடுத்தவுடன் மிகப் பெரும் சம்பளத்தை வருமானமாக எதிர்பார்க்கிறார்கள். முதலில் நீங்கள் உங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அதற்கேற்ப வேலையும் ஊதியமும் பெற்றுக் கொள்ளும் சூழ்நிலை எப்பொழுதுமே உண்டு.

இறுதியில் திரு. பொ. பாலேந்திரனின் நன்றியுரையுடன் இப் பாராட்டு விழா 7.30 மணியளவில் இனிது முடிவுற்றது.

இதனைத் தொடர்ந்து இரவு, பழைய ஆஸ்பத்திரி வீதியில் உள்ள Capt.S.சிவநேசன் அவர்களது இல்லத்தில் இராப்போசன விருந்து உபசாரமும் நடைபெற்றது. இதில் சுமார் 40 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

நன்றி


செயலாளர்



.............................

(பொ.பாலேந்திரன்)

19.09.2015




## முயற்சிகள் தவறலாம் முயற்சிக்கத் தவறலாமோ?

# வாழ்த்துச் செய்தி

## Mr. T.Manivasager
## The Eminent Shipping Entrepreneur



You have been the leading light
for our Valvettithurai youths.
you were instrumental in elevating
our boys to excel & shine,
universally.

We salute with gratitude

## திரு தா.மணிவாசகர்
## பிரபல கப்பல் தொழிலதிபர்

மணி அண்ணா!
வல்வை இளைஞர்களின் வழிகாட்டியே!
நவீன கப்பல்களின் அறிமுகச் சிற்பியே!
மணியான வாசகங்களால் எம்மை
கவர்ந்த கலங்கரை விளக்கே!

கௌரவிக்கின்றோம்!

**We reproduce the felicitous message sent to you in January 2013, according to the unanimous resolution passed in our General meeting held on 29.12.2012**

"Your unrelaxed and unassuming services rendered to the youngsters of Valvettithurai, to try for opportunities and engage themselves in merchant shipping industries. were appreciated by all. Also mentioned that the enormous numbers of families were benefitted in many ways by your services.

As we all know that, you were the Pioneer and leading height, who has chartered a clean course of guidance for our youngsters to become Ship Masters, Engineers and many skilled personnels in other fields.

The full house wanted to express their sincere gratitude and appreciation."

பொது மக்களுக்கு வழங்கிய தங்கள் பற்றிய கண்ணோட்டத்தில் இருந்து...
"பண்டைய வல்வை மக்கள் சிறந்த கடலோடிகளாகவும் கப்பல்களின் சொந்தக்காரர்களாகவும் விளங்கினார்கள். அந்த பாரம்பரியத்தில் வந்த பல இளைஞர்களுக்கு வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை வாய்ப்புக் கொடுத்தார். இதன் மூலம் அவர்களுடைய திறமைகளை வெளிக்கொண்டு வந்தார். அவர்களுடைய குடும்ப விளக்கை ஏற்றி வைத்தார். இதனால் பலரோரதும் வாழ்க்கைத்தரமும், வளமும் உயர்ந்தது வரும் செல்வச் செழிப்புடன் சிறந்து விளங்கியது குடும்பப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டன. மேற்படிப்பு படிப்போர்க்கு பணமும் கிடைத்தது. எந்த ஊரிலும் இல்லாத வகையில் அநேக கப்பல் தலைவர்கள், தலைமை இயந்திர அதிகாரிகள், 1ம், 2ம், 3ம் நிலை உத்தியோகத்தினர் மற்றும் சிறந்த மாலுமிகள் போன்றோரும் திரு மணிவாசகர் அவர்களின் ஊக்குவிப்பினால் உருவாக்கப்பட்டார்கள்.

மணி அண்ணா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற இந்த உயர்ந்த உள்ளம் கொண்ட செயல்வீரர் இத்தனை வருடங்களாகியும் சோர்வின்றி, உற்சாகத்துடனும், புத்துணர்ச்சியுடனும், வல்வை மக்களினதும், இளைஞர்களினதும் எதிர்காலத்தை வளம்படுத்தும் முயற்சியில் தற்போதும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கின்றார். நேரத்திற்கு நேரம் ஆக்கபூர்வமான அறிவுரைகளையும், செயல்பாடுகளையும் நிதியுதவிகளையும் வல்வையின் இளைய சமுதாயத்திற்கு தனிப்பட்ட ரீதியிலும் VttSWA மூலமும் ஆற்றிக் கொண்டே இருக்கின்றார்."

வல்வையின் பிரபலங்களில் ஒருவரான உங்களை வல்வை மக்களுடன் இணைந்து வாழ்த்தி கௌரவிப்பதில் நிறைவு காண்கின்றோம்.

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்
Valvai Seamen Welfare Association 15.09.2016

VaiSWA

ஊர்காவற்றுறை மைந்தன்

கப்டன் S.சிலுவைதாஸ்

அவர்களுக்கு

# சேவைநலன் பாராட்டு



14.12.2014ல் நடந்தேறிய வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் பொதுக் கூட்டத்தில் Capt S.A.F சிலுவைதாஸ் அவர்கள் வல்வை மாலுமிகளுக்கு ஆற்றிய அளப்பரிய சேவை எல்லோராலும் மிகவும் பாராட்டப்பட்டது.

1980 ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், வல்வை நகரத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, கிரேக்க நாட்டுக்கப்பல்களில், பல நூற்றுக்க... நிலையில் வேலைவாய்ப்புக்களை வழங்கி உதவி செய்தார். பலருடைய வாழ்வு ஆதாரங்களை மேன்மையடையச் செய்த பெருமையும் புகழும் அவரையே சாரும்.

மேற்கூறிய காலப்பகுதி தமிழ் இளைஞர்களின் வாழ்வில் மிகவும் நெருக்கடிகள் நிறைந்த காலம். எத்தனையோ பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வெளிநாட்டு ... நிலையங்களிலும், சிறைகளிலும் அடைக்கப்பட்டிருந்தனர்.

அந்த வேளைகளிலும் துணிந்து, பாதுகாப்பு சம்பந்தமான நிர்வாகத்தின் சம்மதத்தில் வேலை வாய்ப்புக்களை வல்வை இளைஞர்களுக்கு வழங்கியிருந்தார். அநேகம் பேர் Deck officers ஆகவும் Junior Engineers ஆகவும், Radio officers மற்றும், Bosun போன்ற தரத்திலும் பணியாற்றியிருந்தனர். அவர்களால் பலருடைய வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தார்.

குறிப்பாக, இவருடைய சில பெருந்தன்மைகளையும், சிறப்புகளையும் சுட்டிக்காட்டுவதென்றால், இவர் ஒருவரிடமும் ஒரு சதக்காசும் பெறாமலே எல்லோருக்கும் கப்பலில் வேலை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்தார். இவர் எல்லோரிடமும் மிகவும் இனிமையாகவே பழகுவார். ... திகழ்கிறார்.

ஊர்காவற்றுறையை பிறப்பிடமாக கொண்ட திரு.சிலுவைதாஸ் அவர்களுக்கு, வல்வெட்டித்துறை மக்களின் மீது மிகவும் அன்பும் பாசமும் உண்டு. பழைய காலத்தில் வல்வெட்டித்துறை கப்பலோட்டிகளுக்கும் ஊர்காவற்றுறை கப்பலோட்டிகளுக்கும் இடையே நீண்ட தொழில் நெருக்கங்களையும், அவர்களுடைய வேலைவாய்ப்புகளையும் அறிந்த நிலையை ... சந்தோசமடைகிறார்.

Capt சிலுவைதாஸ் நீடூழி வாழ்ந்து மென்மேலும் தமிழ் சமுதாயத்திற்கு சேவைகள் செய்ய வேண்டும் என்று வல்வை மாலுமிகள் சங்கம் சார்பில் வேண்டிக் கொண்டு அவரை வாழ்த்துகின்றோம்.

சங்கத்தின் சார்பாகவும் வல்வெட்டித்துறை மக்கள் சார்பாகவும்.

**28.01.2015**

## கப்பல் தொழிலதிபர்
## திருவாளர். தாமோதரம்பிள்ளை மணிவாசகர்
## அவர்களின் மகத்தான சேவையைப் போற்றும் வல்லை மாலுமிகளின் கவிமாலை

1. தாமோதரம்பிள்ளை நாகரெத்தினம்
தந்தவோர் அரும்புதல்வன் - நாம்
மணியண்ணா என்றழைக்கும்
மணிவாசகர் நாமமாகும்

2. அரும்பெரும் திறமைகொண்ட
அரியதெங்கள் வல்லையூரில்
பழம்பெரும் மாலுமிகள்
பாய்க்கப்பல் ஓட்டினார்கள்

3. அந்தவழி வந்தவர்கள்
அன்புமிக்க அண்ணாவும்
சொந்தமாகத் தொழில் தொடங்கி
தொழிலதிபர் ஆயுயர்ந்தார்

4. கடல்கடந்து நாடு சென்றார்
கப்பல்கள் ஓடவிட்டார்
கடலன்னை மனம்போன்று - நம்
ஊருயர வழி வகுத்தார்

5. அரியகுட்டிப் பள்ளியிலே
படித்த எங்கள் அண்ணன்மார்
அடிபொறுக்க முடியாமல்
அடுத்த கட்டம் தேடினார்கள்

6. திசையின்றித் தவித்துநின்ற
இளையதோர் தலைமுறைக்கு
அசைக்கவே முடியாத
அஸ்திவாரம் அமைத்தீர்கள்

7. கல்லையும் கனியவைக்கும்
கற்றுதிறன் கல்வியினால்
புல்லையும் பூவாக
மணம்பரப்ப வைத்தீர்கள்

8. மணிவாசகர் கப்பலிலே
எங்கள்மகன் (ஐ) போகவென்று-அன்று
ஏங்கப்பட்ட அம்மாக்கள்
தம் புதுநகையைக் காட்டினார்கள்

9. சுவிட்சுதடையும் நீவிடைக்கும்
எங்களூரில் மலிந்ததென்றால் - அன்று
தவித்திருந்த இளைஞர்களை - நீங்கள்
தங்கமாக மாற்றியதால்

10. கோவிலென்ன குளமென்ன - வல்லையின்
கடைகண்ணித் தெருவாலும்
நாவிலென்று தவழ்ந்ததெல்லாம் - நம்
மணியண்ணா பெயராகும்

11. நாடுவிட்டுச் சென்றவுடன்
நம்மூரை மறப்பவரில் - அரும்
பாடுபட்டு ஊருயர
அன்புவழி நின்றீர்கள்

12. சேவையிலும் சேவைசெய்த
சிறப்புமிக்க மாமணியே
பூவையவன் ஆசியுடன்
நூறாண்டு வாழியவே

13. பொன்னெழுத்தில் இடம்பிடிக்கும்
பொன்னான நம்மூரில்
அண்ணாவும் திருநாமம்
அழியாத கலையாகும்

அன்புடன் போற்றும்
வல்லை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

கவிதை ஆக்கம்
பா.தங்கத்தமிழன்

15.09.2015ல் மணியண்ணாவுக்காக வல்லைப் பொதுமக்களால் நடாத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் வாசித்து வழங்கப்பட்டது.

சிவமயம்

# கப்பற்துறை முன்னோடி
# திரு வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களிற்கான
# கௌரவிப்பு



## வாழ்த்துப் பாமாலை

1. விசாகப்பெருமாள் சரஸ்வதியின்
வம்சமதில் மலர்ந்தீர்கள்
விசாலமான மனதுடனே – நம்
மனங்களிலே அமர்ந்தீர்கள்

2. திருமலை துறைமுகத்தில்
பணிபுரிந்த தந்தையாரின்
அருமையான வழிநின்று
அவனியிலே வந்தீர்கள்

3. அன்னபூரணிக் கப்பலிலே
அமெரிக்கா சென்றுவந்தார் – ஐயா
இரத்தினசாமி அவருமக்கு
அருமைமிகு பேரனானோர்

4. சாதனைகள் பலபடைத்த
சந்ததியில் வந்ததனால்
நூதனமாய்க் கடலோடி – நம்
ஊர்பெயரை உயர்த்தினீர்கள்

5. பெருமைபேசும் மனிதரிலே
வேறுபட்டு நின்றீர்கள்
உரிமையுடன் ஊரவர்க்கு
உதவி பல புரிந்தீர்கள்

6. பாய்க்கப்பல் ஓட்டிவந்த – நம்
பரம்பரையில் புதியவரை
ஒய்லராக 'ஏபி'யாக
உருவாக்கி மகிழ்ந்தீர்கள்

7. சாந்தலிங்கம் அண்ணாவை
முகவராக அமைத்தீர்கள்
சாந்தமான மனதுடனே
சகலரையும் கவர்ந்தீர்கள்

8. நகரபிதா ஞானமூர்த்தி
அம்பலம் மாஸ்ரருடன் – வல்வை
நகருயரும் திட்டமொன்றும்
கட்டமைத்துத் தொடங்கினீர்கள்

9. மணியண்ணா கப்பலுடன்
மற்றும் F பல் நிறுவனமும் – உங்கள்
பணிவான கனிவான கடமையுணர்வைக்
கதைசொல்லும்

10. நூற்றுக்கும் மேலோர்க்கு
கடல்வாழ்வு தந்தவரே
போற்றுகின்றோம் அகமகிழ்ந்து – எங்கள்
கிருஷ்ணமூர்த்தி அண்ணாவே

11. உம்மோடு ஊரவரும்
உழைப்புயர நின்றவரே
அன்போடு வேண்டுகின்றோம் – நும்
அரும்பணியைத் தொடர்வீர்கள்

12. விளக்கேற்றி வைத்த எங்கள்
வல்வையர்கள் வரிசையிலே – கலங்கரை
விளக்காக ஒளிரும் நீங்கள்
ஆயிரத்தில் ஒருவரே!

**ஆக்கம்:**
**வல்வை**
**பா.தங்கத்தமிழன்**

10.01.2016

**வாழ்த்துபவர்கள்**

**வல்வை மக்கள் சார்பாக, VaiSWA**
**வல்வை மாலுமிகள்**
**நலன் புரிச்சங்கம்**

### *விசேட கௌரவிப்பு நிகழ்வுகளும் அதற்கான இரவு விருந்துபசாரச் செலவுகளும்*

கீழ்க்காணும் கௌரவிப்பு நிழ்வுகள் நடப்பாண்டில் நிகழ்ந்துள்ளன.(2015)

1. 28.01.2015 அன்று ஊர்காவற்துறை மைந்தன் Capt S.A.F சிலுவைதாஸ் அவர்களுக்குரியது.
2. 06.05.2015ல் நடைபெற்ற வல்வை முத்துமாரி அம்மன் திருவிழாக்கால (4வது) ஒன்றுகூடலிலன் பின்னர் திரு T.சண்முகதாஸ் மற்றும் திரு S.சாந்தலிங்கம் அவர்களுக்கான கௌரவிப்பு.
3. 15.09.2015 தினத்தன்று பிரபல கப்பல் தொழில்அதிபர் திரு தா.மணிவாசகர் அவர்களுக்கான கௌரவிப்பு.

எமது சங்கத்தின் கொள்கையானது நலன் விரும்பிகள் சங்க முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக செய்யும் அன்பளிப்புக்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு மட்டுமே செலவு செய்வதாகும். இதன் அடிப்படையில் கௌரவிக்கப்படுபவர்களுக்கு வழங்கப்படும் இராப்போசன விருந்திற்கான செலவுகளை நலன்விரும்பிகளிடமிருந்து அன்பளிப்பாக பெறுவது என நிர்வாகசபை முடிவு செய்தது இக்கொள்கைக்கிணங்கவும் Seamen club ஒன்றை எதிர்காலத்தில் வல்வையில் உருவாக்க வேண்டும் என்ற Capt.S.**சிவநேசன்** அவர்களின் சிந்தனைப்படியும் மேற்படி இராப்போசவிருந்துகள் நடைபெற்றன.

இதற்கான அன்பளிப்புக்களை கீழ் காணப்படும் நலன் விரும்பிகள் தந்துவினர். இவர்களுக்கு நிர்வாகம் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் இச்செலவுகள் சங்கத்தின் நிதியை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்பதையும் அறியத்தருகிறோம்.

### *அன்பளிப்புக்கள் வழங்கியோர்*

**Capt.S.A.F சிலுவைதாஸ் நிகழ்வுக்கு**

1. Capt.N.விநாயகமூர்த்தி
2. Capt R.இராஜேந்திரா
3. Capt S.சிவநேசன்

4வது ஒன்றுகூடலின் போது திரு T.சண்முகதாஸ் மற்றும் திரு S.சாந்தலிங்கம் அவர்களுக்கான கௌரவிப்புக்கு

1. Capt.N.விநாயகமூர்த்தி
2. Capt R.இராஜேந்திரா
3. Capt S.சிவநேசன்
4. திரு T.வெற்றிவேல்
8. Capt. S.பாஸ்கரன்

தொழிலதிபர் திரு T.மணிவாசகரின் நிழ்வுக்காக

1. திரு R.இராஜேந்திரா
2. Capt. S.சிவநேசன்
3. திரு T.வெற்றிவேல்
4. Capt. S.பால்ராஜ்
5. Capt. N.கலைநேசன்
6. Chief Engineer N.ஜெயவீரசிகாமணி
7. Chief Engineer ச.பாலேந்திரன்
8. Capt. S.பாஸ்கரன்
9. Chief Engineer M.பத்மநாதன்
10. Capt. K.வைத்தியகுமார்
11. மூத்தமாலுமி திரு T.நவரத்தினம் ஐயா

# முன்னோடிகள்

Captain C.மோகனதாஸ் அவர்களின் முயற்சியால் காங்கேசன்துறையில் (மையிலிட்டி) நடாத்தப்பட்ட Marine Instituteல் கற்கைநெறிகளை கற்றுத்தேர்ந்த பலரில் (எம்மால் 10.01.2016ல் கௌரவிக்கப்படுகின்ற) திரு.வி.கிருஷ்ணமூர்த்தியும் ஒருவர் ஆவார். அவர்,

1. அங்கு கல்வி கற்பதற்காக மாதாந்த கட்டணம் ரூபா 1000/= கட்டிய 28.03.1984 திகதியிடப்பட்ட ரசீது.
2. அதே ஆண்டு (02.04.1984) காலப்பகுதியில் கொழும்பு Port Authority யில் Mate Exam க்காக கட்டப்பட்ட ரூபா.93.75 ற்கான பரீட்சைக்கட்டணப் பற்றுச்சீட்டு என்பன இங்கு காட்சிப்படுத்தப்படுகின்றன.


இவருடன் சேர்ந்து கற்ற சில வல்வை மாலுமிகளின் பெயர் விபரங்கள் வருமாறு

1. திரு நாகமுத்து பாலேந்திரன் (அமரர்)
2. திரு சுப்பிரமணியம் சிவாஜி
3. திரு வைத்திலிங்கம் முத்துக்குமார் (முத்து)

இவர்களும் கற்றுத்தேறி கப்பல் தொழிலில் முன்வந்தவர்களே. அத்துடன் இந் நால்வரும் Chief officers ஆக வேலை செய்துள்ளார்கள்.

இவர்கள் எமது முன்னோடிகளாக திகழ்ந்தமையை இவ் ஆவணத்தின் மூலம் VaiSWA பாராட்டிக் கௌரவிக்கின்றது.

நிர்வாகம்



Institute of Marine Studies

9

Fisheries Harbour,
Myliddy,
KANKESANTHURAI.

Date ............ 198

Received with thanks from ............

of ............

the sum of Rupees ............

............ and cents ............

being payment for ............

Cash / Cheque No. ............

Rs. 1000/-

Registrar



ORIGINAL

SRI LANKA PORTS AUTHORITY

225167